# அனுபவ வைத்திய முறைகள்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 230

# அனுபவ வைத்திய முறைகள்

பதிப்பாசிரியர்கள் :

**டாக்டர் T. V. வரதராஜன், D.A.M.**

ஆராய்ச்சியாளர்

மைய ஆயுர்வேத, சித்த மருத்துவ ஆராய்ச்சிப் பகுதி,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

&

**புலவர் ச. திலகம், B. Litt.**

தமிழ்ப்பண்டிதர்,

சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

2005 விலை : ரூ. 30

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | : அனுபவ வைத்திய முறைகள் |
| பதிப்பாசிரியர்கள் | : டாக்டர் T. V. வரதராஜன், D. A. M., புலவர் ச. திலகம், B. Litt. |
| வெளியிடுபவர் | : இயக்குநர், சரசுவதி மகால் நூலகம் |
| வெளியீட்டு எண் | : 230 |
| மொழி | : தமிழ் |
| பதிப்பு | : மூன்றாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : 2005 |
| தாள் | : TNPL 17.8 kgs. |
| நூல் அளவு | : 21 x 14 c.m. |
| பக்கங்கள் | : 88 |
| படிகள் | : 1000 |
| எழுத்து | : 12 |
| அச்சிட்டோர் | : சரசுவதி மகால் நூலகம் |
| புத்தகக்கட்டு | : மெலிந்த அட்டை |
| பொருள் | : மருத்துவம் |
| விலை | : ரூ. 30 |

# வெளியீட்டாளர் முகவுரை

சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்ப்பிரிவு ஏட்டுச்சுவடி எண். 67 ஆகவுள்ள அனுபவ வைத்திய முறைகள் எனும் சுவடியின் அச்சு நூல் பதிப்பான இந்நூல் நம் நாட்டு பாரம்பரிய மருத்துவத்தின் பல்வேறு சிறப்புக்களை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. 180 வகையான மருத்துவ முறைகள் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்தில் தஞ்சை அரண்மனையில் இருந்த மருத்துவ விற்பன்னர்களால் அனுபவ ரீதியாக கண்டறியப்பெற்ற மரபுவழி மருத்துவ முறைகளே இந்நூலில் பேசப்பெறுகின்றது.

நசிய மருந்துகள், எண்ணெய் வகைகள், சூரணங்கள், கஷாய முறைகள், லேகியங்கள், மருத்துவ நெய்கள் என பலவகையான மருந்து தயாரிப்பு முறைகளை இந்நூல் எளிதாக விளக்குகின்றது. மூன்றாவது பதிப்பைப்பெறும் இந்நூலினை மருத்துவர் டி. வி. வரதராஜன் என்பவரும், சரஸ்வதி மகால் தமிழ்ப்பண்டிதர் புலவர். ச. திலகம் அவர்களும் ஏட்டுச்சுவடியில் இருந்து பதிப்பித்துள்ளனர்.

பதிப்பாசிரியர்களையும், இந்நூல் வெளிவர பெரிதும் துணைநின்ற நூலக நிருவாக அலுவலர் திரு. ஆர். சுப்பிரமணியன், வெளியீட்டு மேலாளர் முனைவர் குடவாயில் பாலசுப்பிரமணியன் மற்றும் நூலக அச்சகப் பிரிவு பணியாளர்கள் ஆகிய அனைவரையும் பாராட்டுகின்றேன்.

நூல் வெளிவர நிதி நல்கிய நடுவண் அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மா. வீரசண்முகமணி,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்
மற்றும் இயக்குநர்

தஞ்சாவூர்.
*10-5-2005*

# பதிப்புரை

சரசுவதி மகால் நூலகத்திலுள்ள சித்த மருத்துவச் சுவடிகளுள் சிறப்புடையனவற்றை நூல வடிவில் வெளியிட்டு வருகிறோம். அனுபவ வைத்திய முறைகள் என்ற நூல் சித்த மருத்துவ நூலாகும். 1986இல் இது வெளிவந்தது. இப்போது இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பெறுகிறது.

அண்மைக் காலத்தில் சித்த மருத்துவ ஆராய்ச்சி பல்கி வருகிறது. சரசுவதி மகால் நூலகத்தில் சித்த மருத்துவத் துறை ஒன்று தனியாக அமைக்கப்படவுள்ளது. தகுதி வாய்ந்த பிற சித்த மருத்துவ நூல்களையும் வெளியிடத் திட்டமிட்டுள்ளோம். சித்த மருத்துவ ஆராய்ச்சியளர்கள் சரசுவதி மகால் நூலகத்துடன் தொடர்புகொண்டு சித்த மருத்துவப் பிரிவுக்குத் தங்கள் பங்கினை அளிக்க விரும்புகின்றோம்.

இந்நூலில் பல்வேறு நோய்களுக்கு அனுபவ மருந்துகள் கொடுக்கப்பட்டுள்ளன. மருத்துவரின் உதவி கொண்டு தனிப்பட்டவர்களும் இந்த மருத்துகளை முறைப்படி தயாரித்து நோய்களைப் போக்கிக் கொள்ளமுடியும்

இந்த நூலை வெளியிடப் பொருளுதவி நல்கிய நடுவண் அரசுக்கும் மிகக்குறுகிய காலத்தில் அச்சிட்டுத் தந்த சிதம்பரம் கஜேந்திரா அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றிகள் உரியன.

**மு. சதாசிவம்,**
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகச் சங்கம்

தஞ்சாவூர்
31-12-89

# PREFACE

This book entitled Avubhava Vaidya Muraigal (Practical Siddha medicines) is one of the important works on Siddha medicines preserved in this library. Practical methods of preparing various diseases are enunciated in this book. the original stanzas are in verse form. Elaborate explanations have been provided by the editors.

This book will serve as one of the most indispensable handbooks for the practising Siddha doctors. Comments on this book are welcome from the experts in the field.

We thank the Central Government for releasing liberal grants for publishing this book and the Gajendra Printers. Chidambaram for their printing work, at a short period.

**M. SADASIVAM,**
Director,
Sarasvati Mahal Library Society.

Thinjavur
31-12-1989

# வெளியிடுவோர் முகவுரை

தஞ்சை சரசுவதி மகால் நூலக வாயிலாக வெளிவரும் "அனுபவ வைத்தியம்" என்ற இந்நூலில் கூறப்பட்டுள்ள மருத்துவ முறைகள் தொன்று தொட்டு, நம் முன்னோர்களால் பின்பற்றப்பட்டவைகளாகும். இருமல், சுவாசகாசம், வாதம், சூலை போன்ற நோய்களுக்குச் சுமார் 180 மருந்து முறைகள் இவற்றின் செய்முறைகள் புதுமையாகவும், எளிமையாகவும் மக்களால் சுலபமாகக் கையாளக் கூடியதாகவும் உள்ளன.

தஞ்சையில் ஆட்சி செய்த மராத்திய மன்னர் இரண்டாம் சரபோஜி (கி. பி. 1798-1832) தன்வந்திரி மகால் என்ற வைத்திய ஆய்வுக் கூடத்தை நிறுவி, இந்திய வைத்தியம் சிறப்புற்று விளங்கச் செய்தவர். அவர் தம் அரிய தொகுப்புக்களிலிருந்து சரபேந்திர வைத்திய முறைகள் என்ற வரிசையிலும், சரபேந்திர வைத்திய ரத்னாவளி, சரபேந்திரர் சித்த மருத்துவச் சுடர் முதலிய தலைப்புகளிலும் சுமார் 25 வைத்திய நூல்களை நூலகம் வெளியிட்டுள்ளது. அன்னார் தொகுத்து வைத்த சுவடிகளின் விவரப் பட்டியல் தயார் செய்வதும், அவற்றிலுள்ள இதுவரை வெளிவராத நூல்களைப் பதிப்பித்து அச்சிடும் அரும்பணியினையும் நூலகம் செய்து வருவது யாவரும் அறிந்ததே. அத்தொகுப்பிலிருந்து தமிழ்ப்பிரிவுச் சுவடி எண். 67 என்ற சுவடியிலிருந்து 'அனுபவ வைத்திய முறைகள்' என்ற இந்நூல் வெளிவருகிறது. இந்நூல் இந்திய மருத்துவத் துறையில் ஈடுபட்டுள்ள ஆய்வாளர்களுக்கும், மருத்துவர்களுக்கும் உதவியாய் அமையுமென நம்புகிறோம்.

இதனை நன்முறையில் சுவடியினின்று வகுத்தெழுதிப் பதிப்பித்துக் கொடுத்துள்ள டாக்டர் டி. வி. வரதராஜன் அவர்களுக்கும், இந்நூலகத்தில் தமிழ்ப்பகுதியில் பணியார்ரும் தமிழ்ப்பண்டிட் புலவர் ச. திலகம் அவர்களுக்கும் எமது பாராட்டுக்கள். இந்நூலை விரைவில் செம்மையுற அச்சிட்டுக் கொடுத்த தஞ்சை ஜெமினி அச்சகத்தாருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூல் வெளிவர நிதியுதவி வழங்கிய நடுவண் அரசுக்கும் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

இங்ஙனம்,

***து. இரா. இராமசாமி***, இ. ஆ. ப.,
மாவட்டாட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதிமகால் நூலகம்.

தஞ்சாவூர்
11-1-1986

✲✲✲✲✲

# முன்னுரை

நம் பாரத தேசத்தில் தொன்று தொட்டு விளங்கிவரும் இந்திய மருத்துவங்களான ஆயுர்வேதா, சித்தா மற்றும் யுனானி மருத்துவ முறைகள் நம் மக்களுக்குப் பயன்பட்டு வருகின்றது. பொதுவாக இந்திய மருத்துவத்தில் சித்த, ஆயுர்வேத மருத்துவங்கள் ஒன்றுக்கொன்று அதிக வேறுபாடு இல்லாமல் பிணைக்கப்பட்டு வந்துள்ளன. சித்த மருத்துவம் திராவிட தேசத்தில் அதிகமாக வழக்கத்தில் உள்ளது. வடதேசத்தில் ஆயுர்வேத மருத்துவம் அதிகமாக வழக்கத்தில் உள்ளது.

ஆயுர்வேதமும், சித்தமருத்துவமும் அடிப்படைத் தத்துவங்கள் ஒரேமாதிரியானவை. யுனானி வைத்தியம் சற்று வேறுபட்டது. சித்த ஆயுர்வேத முறைகள் பஞ்சபூதம் அதாவது பிருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாசம் இந்த ஐந்தாகும். இந்த ஐந்தும் கெட்டுப் போகும் பொழுது உலகத்தில் இருக்கும் அனைத்து ஜீவராசிகளுக்கும் கெடுதல் விளைவிக்கின்றன. உலகத்தில் எறும்பில் தொடங்கிப் பெரிய விலங்கான யானை முடிய எல்லா ஜீவராசிகளும் பஞ்சபூதத்தினால் ஆனவை. குறிப்பாக மனித வர்க்கத்தைப் பார்க்கும்பொழுது பஞ்சபூதங்கள் கெட்டுப் போகும் நிலையில் மனித தேகத்தில் உள்ள மூன்று தோஷங்களான வாதம், பித்தம், கபம் இம்மூன்று தோஷங்களும் படிப்படியே கெட்டுப்போய் மானிட தேகத்தில் வியாதியை உண்டுபண்ணுகின்றன. ஆகையால்தான் நம் இந்திய மருத்துவங்களான சித்த, ஆயுர்வேத மருத்துவங்களுக்குத் தனிச்சிறப்பு.

தற்காலத்தில் ஆங்கில மருத்துவம் இன்று அதிகம் மக்களால் விரும்பப்பட்டு வரும் நிலையிலும் கூடத்

தொன்றுதொட்டுவரும் நம் மருத்துவங்களான ஆயுர்வேத, சித்த முறைக்கு நல்ல பிரகாசம் இருந்துகொண்டு வருகின்றது. காரணம் ஒரு ஆங்கில மருந்து ஒரு வியாதிக்குக் கண்டு பிடிக்கப்பட்டு, பல ஆண்டுகளான, பின்பு அதே மருந்து மானிட தேகத்தில் உயிரை மாய்க்கும் தன்மையை உண்டாக்குகிறது. ஆனால் தொன்றுதொட்டு வரும் நம் மருத்துவத்தில் உள்ள மருந்துகள் இன்றும் ஒரே மாதிரியான தன்மையுடையதாக இருந்துகொண்டு வருகின்றன. இதற்குக் காரணம் இந்திய மருத்துவங்களான திரிதோஷ, (பஞ்சபூத திரீதான்) இந்த திரீயானது நம் உலகம் அழியும் வரையில் மாறாது.

ஏதாவது ஒரு தோஷம் ஒருவனுக்கு அதிகம் இருந்தால் அந்தத் தோஷத்திற்கு நல்ல மருத்துவர்கள் நாடிப் பரிசோதித்து எந்தத் தோஷம் சோபித்துள்ளதோ அதற்கு மருத்துவம் செய்கிறார்கள். ஆகையால் கொஞ்சம் அதிகமான காலமானாலும் அந்த வியாதி திரும்ப வருவதில்லை. இது எல்லோரும் கண்ட உண்மை. இத்துணைச் சிறப்பு வாய்ந்த நம் மருத்துவத்தை நம் தேசத்திற்கு அர்ப்பணித்த மகரிஷிகள், சித்தர்கள் அனேகம் பெயர்கள் உண்டு. பொதுவாக சித்த மருத்துவத்தில் அகத்தியர், போகர் மற்றும் பல சித்தர்கள் தமிழில் நமக்குப் பல பாடல்களாக எழுதி வைத்துள்ளனர்.

ஆயுர்வேத மருத்துவத்தைச் சரசு, சுச்ருதா, வாக்படா மற்றும் அனேக மகரிஷிகள் வடமொழியில் நமக்கு எழுதி வைத்திருக்கிறார்கள். இந்த இரண்டு மருத்துவங்களும் தற்பொழுது பல புத்தகங்களாக நம்மிடையே பழக்கத்தில் உள்ளன. இதைத்தவிரப் புத்தக வடிவில் இல்லாத நல்ல மருத்துவங்கள் ஓலைச்சுவடியிலே உள்ளன. இதைச் சேகரித்த தஞ்சை மன்னர் மராட்டிய மன்னரான சரபோஜிதான். இவர் பாத யாத்திரையாகக் காசி வரையில்

சென்று ஆங்காங்கே உள்ள பேர்பெற்ற மருத்துவர்களைச் சந்தித்து அவர்களிடம் விவாதித்து, அவர்களைத் தஞ்சை அரண்மனைக்கு அழைத்து, அவர்களை நன்கு உபசரித்து அவர்களிடம் உள்ள மருத்துவச் சிறப்புகளைச் சுவடியில் எழுதி வைத்து அதில் உள்ள மருத்துவ முறைகள் மக்களுக்குப் பயன்படும் வகையில் மருத்துவச் சாலையும், மருத்துவமனையும் (தன்வந்திரி மகால்) நிறுவி இவர் எழுதியுள்ள பிரயோகம் அனைத்தையும் உபயோகிக்கச் செய்து நல்ல மருத்துவ முறைகளை மட்டும் பாதுகாத்து வைத்துள்ளார். ஆகையால்தான் இன்றும் சரசுவதி மகாலில் மத்திய அரசாங்கத்தாரால் ஆயுர்வேத, சித்த மருத்துவ ஆய்வு மையம் நடந்து வருகிறது.

இங்குச் சுவடியில் உள்ள மருத்துவ முறைகள் தற்போது பயிலும் மருத்துவ நூலில் இல்லாதது சிறப்பாகும். இந்த அரிய பொக்கிஷத்தைக் காப்பாற்றிய மன்னர் சரபோஜிக்கு நன்றிக் கடப்பாடு உடையவர்களாவோம்.

தற்போது இந்தப் புத்தகம் மகாலில் உள்ள தமிழ் பகுதியில் மருத்துவப் பிரிவில் உள்ள சுவடி எண். 67-ஐக் கொண்டதாகும். இந்த “அனுபவ வைத்திய முறைகள்” என்ற நூலில் தொடக்கத்தில் சொல்லியபடி பலவிதமான முறைகள் கூறப்பட்டுள்ளன. பல மருத்துவ முறைகள் பாடல் வடிவத்தில் இருந்தாலும் வசன நடையில் கூறப்பட்ட மருத்துவ முறைகளையே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. உதாரணமாக சூலைக்கும், காச சுவாசத்திற்கும் கூறப்பட்டுள்ள மருந்துகளும், செய்முறைப் பயிற்சியும் நன்றாக உள்ளன. இதைத் தவிரப் பல புதுமையான பிரயோகங்கள் உள்ளபடியால் இதை வைத்தியர்களுக்கும், மருத்துவ ஆராய்ச்சித் துறையில் உள்ளவர்களுக்கும் பயன்படும் என்ற முறையில் இதைப் பதிப்பித்து உள்ளோம்.

இந்த நல்ல மருத்துவ நூலைப் பதிப்பிக்கும் பணியை, எங்களுக்கு அனுமதித்த இந்நூலக இயக்குநரும், மாவட்ட ஆட்சியருமாகிய திரு. து. இரா. இராமசாமி, அவர்களுக்கும், இந்நூல் பதிப்பாகப் பலவகையிலும் அனுமதி வழங்கி உதவி புரிந்த இந்நூலக நிருவாக அதிகாரி (பொறுப்பு)யுமான திரு. அ. பஞ்சநாதன், M.A., B.Lib. Sc., அவர்களுக்கும், நூலை விரைவாக வெளியிட அச்சிட்டு உதவிபுரிந்த தஞ்சை, ஜெமினி அச்சகத்தாருக்கும் எங்களது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்,

டாக்டர் T. V. **வரதராஜன்,** D. A. M.,
ஆராய்ச்சியாளர்,
மைய ஆயுர்வேத, சித்த மருத்துவ ஆராய்ச்சிப் பகுதி,
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

புலவர் ***ச. திலகம்,*** B. Litt.,
தமிழ்ப்பண்டிட்,
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

தஞ்சாவூர்
2-1-86

## இந்நூலில் அடங்கியுள்ள
## வியாதிகளின் அகர வரிசைப்பட்டியல்


பக்க எண்

அரிதாரச் சிந்தூரம் (சிறுநீர் கழிய) 66
ஆனி இருமலுக்கு மருந்து 59
இருது சூலைக்கு எண்ணெய் 26
இருமலுக்கு 47, 48, 49
இருமலுக்கு, சளிக்கு நசியம் 66
இருமல ஈளைக்கு (வேறு) 53
இளைக்கும் இருமல் ஈளைக்கு ராகாவடிவு 51
இருமல் இளைப்புக்கு மருந்து 55
இருமல் ஈளை தீபனத்துக்குத் தாளீச பத்திரி கிருதம் 66
இருமல் இரைப்புக்கு தூதுவிளம் நெய் 59
இருமலுக்கு உருண்டை. 52
இருமலுக்கு எண்ணெய் 61
இருமலுக்கு கஷாயம் 50
இருமல் காயா சுவாசத்துக்கு எண்ணெய் வகை 55
இருமலுக்குக் குடிநீர் 48
இருமலுக்குக் கையாந்தகரை எண்ணெய் 54
இருமல் தீர இன்னமொரு வகை 52
இருமலுக்குத் தேத்தா நெய் (வேறு) 54
இருமலுக்குத் திப்பிலி நெய் 64
இருமலுக்குப் புகை 56
இருமலுக்கு புகை உண்ணத் தீரும் 58
இருமலுக்கு நாக சிந்தூரம் 64
இருமலுக்கு நாசியாலே இரத்தம் விழுகிறத்துக்கு மருந்துப்புகை 56
இருமலுக்கு நெய்க்கடுகு 57
இருமலுக்கு மருந்து 47, 48, 51, 53, 54, 65
இருமல் முதலானதுக்கு நாகபறபம் 47
இருமல் வாந்திக்குப் பேராமட்டி நெய் 58
இருமலுக்கு லவங்காதிச் சூரணம் 47
இரைப்புக்கு 47
இரத்த காசத்துக்கு 44
இரைப்புக் கஷாயம் 47
ஈளை இருமலுக்கு 61

ஈளை இருமல் சுவாசகாசம் தீரச் சிங்காதிச் சூரணம் 51
ஈளை இருமலுக்கு ஆடாதொடை நெய் 64
ஈளை இருமல் இளைப்புக்கு மருந்து 62
ஈளை இருமல் முதலானதுக்குத் திரிபலாதி கிருதம் 52
ஈளைக்கு 59, 63
ஈளை இருமல், அருப்பு, அருவிருப்பு, சுவாசகாசம்
உட்பட்ட வியாதிக்கு 64
ஈளை இருமல் மந்தாக்கினிக்கு 62
ஈளைக்கு நெய் 63
ஒருத் தலைவலிக்கு 17
கபத்துக்கும், சுவாசத்துக்குஞ் சூரணம் 70
கபரோகத்துக்கு சூத்ராயயாதி லேகியம் 69
கபால சூலை, தலைவலி, பிடரி கனப்பு ஒருத்தலைவலிக்கு 17
கரச்சூலை கருக்காயம் 23
காசத்துக்கு 42
காச சுவாசத்துக்கு 32
காயா சுவாசம் இளைப்பு, இணைப்பு, பீனிசம் இதற்கு லேகியம் 35
காச சுவாச கிருதம் 32
காச சுவாசங்களுக்குத் திப்பிலியாதிரசாயனம் 35
காச இருமலுக்குத் தூதுவளை எண்ணெய் 28
காச சுவாசம் பாண்டு காமாலை உள்பட்ட வியாதிக்கு தாளீச வடகம் 31
காச ரோகத்துக்கு பாவநாச அரிதார கடுக்காய் 42
காச சூலைக்குக் கஷாயம் 24
காச சுவாச முள்பட்டத்துக்கு தசமூல நெய் 30
காச முதலான ரோகத்துக்குப் பூஷணிநெய் 42
காச ரோகத்துக்குச சண்ட மாருத லேகியம் 43
காச சுவாச முதலான பலரோகத்துக்கு குண்டலியாதி லேகியம் 28
காயா சுவாசத்துக்கு பூஷணி நெய், விக்கல் காச ரோகத்துக்கும் 35
குன்ம சூலைக்கு 14
குன்ம சூலைக்கு மெதுக் கொள்ள 17
குலைப்புக்கு 63, 64
கெந்தகச் சூரணம் 20
சகலமான சூலைக்கு லசுநாதி ஏரண்டத் தயிலம் 6
சருவ சூலைக்கும் இங்குவாதிச் சூரணம் 4
சுவாச காசத்துக்கு மருந்து 29,30,32,41
சுவாச காசத்துக்குக் குடிநீர் 32

| | |
|---|---|
| சுவாச காசத்துக்குத் தாளீச மாத்திரை | 39 |
| சுவாச காசத்துக்குக் குக்குலாதி மாத்திரை (வேறு) | 40 |
| சுவாச காசத்துக்குச் சண்முகரசம் (வேறு) | 41 |
| சுவாச காசத்துக்குக் குண்டலியாதி லேகியம் | 36 |
| சுவாச காசத்துக்கு அஷ்த்திசுரத்துக்கு இருமலுக்குத் தாளீச சூரணம் | 29 |
| சுவாச காசத்துக்குத் தாளக பற்பம் | 29 |
| சுவாச காசத்துக்குப் பஞ்ச கோலாதிச் சூரணம் | 38 |
| சுவாச காச முதலஆனதுக்கு நிரா அபையரதி லேகியம் | 33 |
| சுவாச காச சேத்துமத்துக்குத் தேட்கடை நெய் | 33 |
| சுவாச காச சேத்துமத்துக்குத் தேட்கடை நெய் (வேறு) | 34 |
| சுவாச காச இருமலுக்கு மருந்து | 28 |
| சுவாச ம முள்பட்டதுக்கு மூல நெய் | 30 |
| சுவாச ரோகத்துக்கும் விளங்காதி சூரணம் | 38 |
| சுரகாசத்துக்கும், வியத்துக்கும் திப்பிலி நெய் | 46 |
| சிலேட்டுமத்துக்கு மருந்து | 69 |
| சிலேட்டுமம் இருபதுக்கும் பெயர் | 68 |
| சிலேட்டும ரோகத்துக்கு நெய் பண்ணும்படி | 68 |
| சூலை ஒட்டிய புண் முதலானதுக்குப் புகை மருந்து | 18 |
| சூலைக்கு உருண்டை | 4 |
| சூலை 9-க்கும் பல வியாதிக்கும் கருங்கோழிச்சூரணம் | 2 |
| சூலைக்கு மருந்து | 1,7, 9 |
| சூலைக்குப் புகை மருந்து | 7,10 |
| சூலைக்குங், கடுப்புக்கும் எண்ணெய் வகை | 13 |
| சூலைக்கடி மருந்து | 12 |
| சூலைக்கட்டுக்கு | 5 |
| சூலைக்கட்டுக்குத் தயிலம் | 7 |
| சூலைக்கட்டுக்குச் சடாரசபற்பம் | 8 |
| சூலைக்கட்டுக்குக் கைகால் குடைச்சலுக்கு மருந்து | 24 |
| சூலைக்கடுப்புக்கு | 11 |
| சூலைக்டுப்புக்குத் கெந்தகத் தயிலம் | 11 |
| சூலைக்கடுப்பு, இடுப்பு வலி முதலான வியாதிக்குப் பறங்கிப்பட்டைச் சூரணம் | 27 |
| சூலைக்கஷாயம் | 1 |
| சூலைக்குடாரம் | 12 |
| சூலைக்குன்மங்களுக்குப் பாவட்டை எண்ணெய் | 16 |
| சூலைரோகத்துக்கு அபயாதிச் சூரணம் | 5 |

| | |
|---|---|
| சூலைவாய்வுக்கு மருந்து | 25 |
| சூலை வியாதிக்குச் சுரசம் | 5 |
| சூலை முதலான ரோகத்துக்கு | 5 |
| சூலை முதலான ரோகத்துக்கு அரிதாரச் செந்தூரம் | 4 |
| சேற்றுமத்துக்கு | 68,69,70,71 |
| சேற்றும விகாரங்களுக்கு நெய் | 67 |
| நிதம்ப சூலைக்கு மருந்து | 23 |
| பஞ்சாக்கினி சூலைக்கு | 13 |
| பக்க காசத்துக்கு | 44 |
| பக்கங்கள் எடுத்துப் போடும் இருமலுக்கு மருந்து | 60 |
| பக்க சூலைக்கு | 21 |
| பக்க சூலை வாய்வுக்குக் கெந்தகச் சூரணம் | 22 |
| பயித்திய காசத்துக்கு எண்ணெய் | 45 |
| பித்த காசத்துக்கு வில்வாதி லேகியம் | 46 |
| புண்ணுக்கு, சூலைக்கு ரசப்பொடி | 10 |
| மண்டை சூலைக்கும், காமாலைக்கும் மருந்து | 18 |
| மந்தார காசத்துக்கு, எலிக்கடிக்கு, இரைப்புக்கு மருந்து | 45 |
| மந்தாரகாசம் முதலானதுக்கு அரிதார பற்பம் | 46 |
| மருத்தீட்டுக்கும் பாதறவற்றின இருமலுக்கும் | 65 |
| முடங்கு சூலைக்கு மருந்து | 25 |
| வாத சூலைக்கு சந்து வாத கரப்பானுக்கு வேது பிடிக்க | 20 |
| வாத சூலைப்புண், ஆறாதபுண், கடிவிஷம், பிளவைக்கு | 20 |
| வாதசூலை முதலானதுக்குக் கெந்தகச் சூரணம் | 20 |
| வாயினாலேயே இரத்தம் விழுந்தால் | 44 |
| வெள்ளைப்பொடி 18-காசத்துக்கும் பல நசலுக்கு மருந்து | 27 |
| வெள்ளை வாகடத்தில் சூலைக்கடுப்புக்கு பரங்கிப் புண்ணுக்கு | 25 |
| யோனி சூலைக்குச் சூரணம் | 24 |

# அனுபவவைத்திய முறைகள்

### *1. சூலைக் கசாயம்*

சங்கங்குப்பி இலை
மிளகு
கலைமான்கொம்பு
சுக்கு
வெள்ளை வெங்காயம்
பெருங்காயம்

இவை சமங்கிஷாயம் வைத்துக் கொடுத்தால் சூலை ரோகம் தீரும்.

### *2. சூலைக் கசாயம் (வேறு)*

ஒரு தலை வெள்ளைப்பூண்டு
முருங்கை வேர்ப்பட்டை
திப்பிலி மூலம்
வசம்பு
பாவட்டை வேர்
சுக்கு

இவை சமங்கிஷாயம் வைத்துக் கொடுத்தால் சூலை தீரும்.

### *3. சூலைக்கு மருந்து*

| | |
|---|---|
| நாபி | சாதிலிங்கம் |
| வெள்ளைபாஷாணம் | அரிதாரம் |
| கெவுரிபாஷாணம் | சீனக்காரம் |
| வங்காளப் பச்சை | நெடிநமச்சாரம் |
| தொட்டிப் பாஷாணம் | யவச்சாரம் (இவட்டசாரம்) |

| | |
|---|---|
| மிருதார் சிருங்கி | காரீயம் |
| அஞ்சனக்கல் | கொட பச்சை |
| கருங்குங்கிலியம் | ஈயம் |
| காந்தம் | ரசம் |

இவை சமன் விராகன் 1, எருக்கம் பால் வார்த்தரைத்து ஒன்பது பங்கிட்டு எருக்கம்பால் சீலையில் சுருட்டிப் புளியஞ்சிராய்த் தணலில் புகை போடவும். ஒரு நாள் ஆற வைத்து 5-ஆம் நாள் விளக்கெண்ணை வார்த்து முழுகவும். நீர்ச்சோறு, பிறகு நெய்த்தோல் கருவாடு, சுறாக் கருவாடு, வெள்ளாட்டு உப்புக்கண்டம் கூட்டிக் கொள்ளவும். இதற்குத் தீரும் வியாதி சூலை, ஒட்டிய புண், வாத சூலை, அண்டவாதம், சருவாங்க வாதம், திமிர் வாதம், வெண்குட்டம், கருங்குட்டம் மண்டைசூலை, செவ்வட்டைக்கடி, சீக் கட்டினது, தண்டுப் பிளவை, காணாக்கடி இவை தீரும்.

### 4. சூலை ஒன்பதுக்கும், பல வியாதிக்கும் கருங்கோழிச் சூரணம்

முத்தக் கோழிதனைப் பிடித்து
முதுகைப் பிளந்து கடுகுப்பு
ஒத்தக் காயம் யெண்கழஞ்சு
உழக்கு மிளகு வெள்ளுள்ளி
பத்தி இடித்து அதுக்குளிட்டுப்
பகரும் பானையில் மேல் வைத்து
சுத்திக் கட்டிப் பானையிற்குள்
சொல்லும் மருந்துநீர் கேளீர்.

### 5. லசுன பீஷ்ட்டி லேகியம் சூலை முதலான ரோகத்துக்கு

மாவிலங்குப் பட்டை
புரசம் பட்டை
அகில் பட்டை
மூக்குறட்டை வேர்
வில்வவேர்

வகைக்கு இரண்டு பலம், இருபதுபடி தண்ணீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி இறுத்து இதில் வெள்வெங்காயம் பலம் முப்பது உரித்து நல்லெண்ணையில் வறுத்து அரைத்து கஷாயத்தில் போட்டுக் காய்ச்சிக் குழம்பாய் வருகிறபோது.

| | |
|---|---|
| சுக்குப்பலம் | 2½ |
| திப்பிலிப்பலம் | 2½ |
| மிளகுபலம் | 1 |
| அரிசித்திப்பிலிப்பலம் | 1 |
| நறுக்குமூலம் | 6 விராகனிடை |
| வெண்காரம் | 6 விராகனிடை |
| கடுக்காய் | 6 விராகனிடை |
| அரத்தை | சித்திரமூலத்தோல் |
| சதகுப்பை | கூனாத்திப்பட்டை |
| இந்துப்பு | செங்கத்தாரிப்பட்டை |
| செவியம் | சாக்ஷுத்திரவேதி |
| சீரகம் | கற்கடசிங்கி |
| கருஞ்சீரகம் | கூகை நீர் |
| மரமஞ்சள் | வாய்விளங்கம் |
| விளாவரிசி | நவட்சாரம் |
| சீனிக்காரம் | தகரம் |
| சடாமாஞ்சில் | அதிமதுரம் |
| ஏலம் | இலவங்கப்பட்டை |
| சிலாசித்து | மிளகரனைப்பட்டை |
| நாயுருவிவரிசி | சிறுதேக்கு |
| வெள்ளைப்போளம் | கற்பூரசிலாசித்து |
| திப்பிலிமூலம் | சாதிப்பத்திரி |
| இரும்பு | வளையலுப்பு |
| கடுகு ரோகிணி | கடுகு |

இவ்வகைக்கு விராகனிடை நாலு, சூரணம் பண்ணிக் கொதிக்கிற வெங்காயக் குழம்பில் தூவிக் கிளரி காலை,

மாலை இரண்டு விராகனிடை சாப்பிடப் புளித்தேப்பம், நெஞ்செரிப்பு, சூசிகா குன்மம், மார்வலி, நிதம்பச்சூலை, ருத்திரசூலை நாபிச்சூலை, உதரச்சூலை, சூசிகா சன்னி, தலைவலி, வேர்வை, மூர்ச்சை, வாதம், சிலேட்டுமம், சூசிகா சுரம், மயக்கம், கைகால் சிறுத்தல், மலசலபந்தம், உப்பிச மேல் சுவாசம், அதிசாரம், குடல்வாதம், வீக்கம், உதிரவாய்வுக்கட்டி, இரத்தக்கட்டி, மேகரோகம், வாதரோகம், விரணங்களெல்லாந்தீரும்.

### 6. சருவ சூலைக்கும் இங்குவாதிச் சூரணம்

பெருங்காயம்
இந்துப்பு
திப்பிலி

இவைகளில் ஓரொன்று கழஞ்சு கடுக்காய் இரு கழஞ்சு இவைகளைச் சூரணம் பண்ணி வென்னீரில் கொள்ளச் சறுவ சூலையுந் தீரும்.

### 7. சூலை முதலான ரோகத்துக்கு அரிதாரச்செந்தூரம்

அரிதாரம்பலம் - 1

பொரசம் பட்டை அரைத்துக் குகைபிடித்து அதற்குள்ளே வைத்துப் புரசம்பட்டை அரைத்ததைக் கொண்டுமூடி சட்டியில் வைத்துச் சட்டி கொண்டு மூடிச் சட்டிவாயைச் சீலைமண் செய்து அடுப்பில் வைத்து நாலுசாமம் எரியிடச் செந்தூரமாம். ஒரு பணவிடை தேனிலிடச் சூலைப்புண், குடோரம், கடிவிஷம், குஷ்டம், பல் வியாதியும் தீரும்.

### 8. சூலைக்கு உருண்டை

| | |
|---|---|
| வசம்பு | பெருங்காயம் |
| கோரைக்கிழங்கு | சுக்கு |
| கழற்சிக்கொட்டைப்பருப்பு | இந்துப்பு |
| மிளகு | வெள்ளுள்ளி |

இவை சமபாகம் எடுத்து எலுமிச்சசம்பழச் சாற்றால் அரைத்துப் பிரமாணமாய் உருண்டை செய்து சாப்பிடச் சூலைகள் தீரும்.

### *9. சூலைக்கடுப்புக்கு*

| | |
|---|---|
| வெள்ளுள்ளிச் சாறு | ஆழாக்கு |
| இஞ்சிச்சாறு | ஆழாக்கு |
| முருங்கையிலைச் சாறு | ஆழாக்கு |
| பெருங்காயம் | விராகனிடை¾ |

ஆக மருந்து நாலுங்கூட்டிக் கொடுக்கவும். சூலைக் கடுப்புச் சீராகும். கை கண்டது.

### *10. சூலைக்கட்டுக்கு மருந்து*

| | |
|---|---|
| வெள்ளுள்ளிச் சாறு | ஆழாக்கு |
| இஞ்சிச்சாறு | ஆழாக்கு |
| முருங்கையிலைச் சாறு | ஆழாக்கு |
| பெருங்காயம் | விராகனிடை¾ |

ஆக நாலு மருந்துங்கூட்டிக் கொடுக்கவும். சூலைக் கட்டு குணமாம். கை கண்டது.

### *11. சூலை வியாதிக்குச் சுரசம்*

சங்கம் வேர் சீவி எலும்பிச்சங்காயளவில் பசுவின் பாலிலரைத்து இருபது நால் குடிக்கச் சூலை வியாதி தீரும். உப்புப், புளி ஆகாது.

### *12. அபயாதிச் சூரணம் சூலைரோத்துக்கு*

நெல்லிமுள்ளி, வாய்விளங்கம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலம், கோரைக்கிழங்கு, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், இவை சமபாகம் இவைக்கு மூன்று பங்கு, சிவதைச் சூரணம் சேர்த்து எல்லாமிடித்துச் சூரணஞ்செய்து இவை சமபாகஞ் சர்க்கரை சேர்த்துப் பிரமாணமாய்

வெந்நீரிலே போட்டுச் சாப்பிடச் சூலைகள் அக்கினி மாந்தியம், மூலம் வாத பித்த கபங்கள் இவை தீரும்.

### 13. லசுநாதி ஏரண்டத்தயிலம் சகலமான சூலைக்கு

வெள்ளைப்பூண்டு துலாம் - 1

தண்ணீர் மரக்கால் - 2 கூட விட்டு நாலிலொன்றாய்க் காய்ச்சிக்கொண்டு அதை வடிகட்டிப் பெரிதாயிருக்கிற தாம்பிர பாத்திரத்திலே விட்டு ஒரு மரக்கால் ஆமணக்கெண்ணை கூட விட்டு இந்துப்பு, திரிபலை, திரிகடுகம், வாய்விளங்கம், தேவதாரம், கோட்டம், பொன் முசுட்டை, வசம்பு பெருங்காயம், கொடிவேலி, வெட்பாலை, அதிவிடையம், ஓமம் யானைத்திப்பிலி, சிறு தேக்குச் சௌவச்சலவணம், புளி, அம்ளவேதசம் இவை வகை ஒன்றுக்குப் பலம் ஒன்று, சிவதை,வேர்ப்பலம் 6. இவை எல்லாம் இடித்துச் சூரணம் பண்ணி எண்ணையில் சேர்த்து மிருதுவாய் எரித்துப் பக்குவமாய் இறக்கிக் கொண்டு அவன் சத்துவத்துக்குத் தக்கதாய்க் கொடுக்கச் சகலமான சூலைகள், மகோதரம், மூத்திரக் கிரிச்சம் உதாவந்தம், பாரிச சூலை, வயிற்றுவலி, மார்புவலி, ஆமசூலை, அரோசிகம், வயிற்றுக் கட்டி, குன்மம், வயிற்றுப் பொருமல், மூல ரோகம் வாதமெண்பது இவை தீரும்.

### 14. சூலை கடுப்புக்குத் தயிலம்

புங்கெண்ணை படி - ¼
வேப்பெண்ணை படி -¼
வெள்ளுள்ளித் தயிலம் படி - ¼
திருகுக் கள்ளிப் பால் படி - ¼
எருக்கம்பால் படி - ¼
கொடிக்கள்ளிப்பால் படி - ¼

இதுவும் எண்ணையுங் கூட்டி நீர்வத்த வெந்த பிறகு

பாஷாணம்
நொச்சிலை ரசம்
சீரகம்
இந்துப்பு
மிளகு
அரிதாரம்

இது வகைக்கு விராகனிடை ½ எலும்பிச்சம் பழச்சாறு விட்டு அரைத்து மூன்று எருக்கிலையில் தடவித் தயிலத்துடன் போடவும். இலைகருக வெந்தால் கிண்டிக் கலசத்திலூற்றிக் கொள்ளவும். ஒரு கொதிக்குப் பிறகு வலிகண்ட விடத்திலிடப் பிடிக்கவும். சன்னி வாதம் என்பதுந் தீரும்.

### 15. சூலைக்குப் புகை மருந்து

ரசம் விராகனிடை - 4
வெள்ளீயம் விராகனிடை - 7

திருகுகள்ளி வேர் விழுது அரைச்சுப்போட்டு, எருக்கம்பால் விட்டு, அரைத்து உருண்டை பண்ணவும். பத்தியமும் 3 நாளைக்கு பத்தியமாயிருப்பது. 3 நாளைக்கு பாகற்காயில் புளியும், உப்பிட்டுக் கரி பண்ணவும்.

### 16. சூலைக் கட்டுத் தயிலம்

விழிசமூலம் கொண்டுவந்து இலைதள்ளிச் சிறுக நறுக்கி ஒரு பாண்டத்திலிட்டுத் தயிலமிறக்கி வைத்துக் கொண்டு பொரிமாவில் பிசறி வெருகடிப்பிரமாணஞ் சாப்பிடவும். சரீரத்திலும் போட்டுப் பிடிக்க, பசுவின் தயிருஞ் சாதமும் போட்டு 5 நாள் உப்புப் புளி தவிர்க்கவும். சூலைக்கட்டுத் தீரும்.

### 17. சூலைக்கு மருந்து

சுடு துரத்தி வடக்கே போகிறவேர் வெட்டி வந்து அந்தப் பட்டையைத் தட்டிக் கொட்டைப் பாக்களவு பசுவின்

பால் விட்டரைத்துக் கொடுக்கவும். இதற்குப் பத்தியம் ஒன்றும் ஆகாது. பசுவின் மோர் விட்டுச் சாப்பிடவும்.

### 18. வேறுமுறை

ரசம் விராகனிடை 10 கொண்டு வந்து கொட்டைக் கரந்தைச் சாரு விட்டுப் 15 நாழிகை அரைத்து மெழுகு போலே திரட்டி வைத்துக்கொண்டு கொட்டைக் கரந்தை அரைத்துக் கைய்த்தடி அப்பம் அரைத்த மருந்துக்குக் கவசங் கட்டி ஏழு சீலை மண் செய்துகுக்குடப்புடம் போட்டு எடுத்துக் கொண்டு தினமொரு ஏழு நாள் கொடுக்கவும். பத்தியம் உப்பு, புளி தவிரவும்.

### 19. வேறுமுறை

| | |
|---|---|
| சித்தாமணக்கெண்ணெய் | கடுகு |
| கழற்சிப் பருப்பு | வாய்விளங்கம் |
| பெருங்காயம் | செவ்வியம் |
| சுக்கு | மிளகு |
| இந்துப்பு | திப்பிலி |
| வெள்ளுள்ளி | திப்பிலி மூலம் |

இவையெல்லாம் பொடி செய்து முடிகொற்றான் இலைச் சாறும் ஆமணக்கெண்ணையும் சமனாகக் கூட்டிக் காயவைத்து அந்த மருந்துப் பொடி தூவித் துளாவி கடுகு பண்ணிக்கொள்ள சறுவ சூலையும் நிற்கும்.

### 20. சூலைகட்டுக்குச் சடாரசபற்பம்

*சாதிலிங்கம் பலம் - 4*

திராவகம் வார்த்தரைத்துச் சட்டியிற் போட்டு மேற்சட்டி கவிழ்த்து ஒன்பது நாழிகை கமலம் போலே எரிக்கவும். இப்படி ஏழுதரம் எரிக்கவும். அதை எடுத்துக் கிரந்திப்புண்ணுக்கு, சூலைக்கட்டு இதற்கெல்லாங் கொடுக்கத் தீரும்.

## 21. சூலைக்கு மருந்து

| | |
|---|---|
| புளியஞ் சிராய் சுட்ட சாம்பல் | பெருகு |
| சங்கு சுட்ட சாம்பல் | புளி |
| பஞ்சலவணம் | தடலை |
| சத்திட்சாரம் | மருள் |
| எவட்சாரம் | காட்டுக்கறணை |
| பிரண்டை | கறிக்கறணை |

இவை ஆறுவகைக் கிழங்கும் கொடிவேலி வேர்ப்பட்டை இவைகளெல்லாங்கூட,

| | |
|---|---|
| சுக்கு | - 8 பலம் |
| மிளகு | - 1 பலம் |
| திப்பிலி | - 1 பலம் |
| பெருங்காயம் | - 1 பலம் |
| இரசம் | - 1 கழஞ்சு |
| கெந்தகம் | - 1 கழஞ்சு |
| தாம்பூரபற்பம் | - 1 கழஞ்சு |
| நாபி | - 1 கழஞ்சு |

இந்தப்படி எல்லாஞ் சேர்க்கக் கூட்டி, எலுமிச்சபழச்சாறு விட்டரைத்து இலந்தைக் கொட்டைப் பிரமாணம் குளிகை பண்ணி உலர்த்தி பஞ்சகவ்விய கிறுதத்திலே ஒரு குளிகை காலமே கொள்ளச் சூலைகள் சகலபுண்கள் வல்லை, அகுவை பீலிகை, ஆனாகம், பெருவயிறு, நீர்க்கோவை, கல்லடைப்பு, மூத்திரகிருச்சம், அஜீரணம், மூலவியாதிகள் தீரும்.

### இன்னுமொன்று அனுபானம் :

பரங்கிப்பட்டை
ஓமம்
அமுக்கிரா வேர்
வெள்ளுள்ளி

சரிகூட்டி கஷாயமிட்டு இதிலேயும் கொடுக்கவும்.

**பத்தியம் :**

நெய், பசுவின்பால் ஆட்டுப்பால் இதிலே வெள்ளுள்ளி விட்டுக் காய்ச்சிப் பத்தியமிடவும்.

### 22. புகை

| | |
|---|---|
| சுத்தியான இரசம் | - நாற்பது பணவிடை |
| காரீயம் | - முப்பது பணவிடை |

ஈயம் கரண்டியிலிட்டு உருகி வருகிற முகத்திலே இரசமிட்டு எடுத்து,

| | | |
|---|---|---|
| வெள்ளைப்பாஷாண | 1 | விராகனிடை |
| அரிதாரம் | 1 | ,, |
| மயில் துத்தம் | 1 | ,, |
| கெந்தகம் | 1 | ,, |
| குங்கிலியம் | 2 | ,, |
| மிளகு | 2 | ,, |
| கடுகு | 2 | ,, |

எருக்கலம் பத்து விராகனிடை சேர ஒன்றாகக் கூட்டிப் பருத்தியிலைச் சாறுவிட்டு நன்றாக அரைத்து 9 உருண்டைபண்ணிப்பொழுதைக்கு ஒரு உருண்டையாகப் புளியஞ் சிராய் தணலிலே புகைப் போகாமல் மூடிப் புகைக்கவும். ஆள் பலமறிந்து ஒன்பது, ஏழு புகைக்கவும். புகை கொள்ளு முன்னே மோர், தயிர் வார்த்து அசனம் பண்ணின பிறகு புகைக்கவும்.

வாயிலே சூலை கட்ட வேண்டாமென்ற பேருக்கு இரச சீலை இரண்டு மடிப்பாக மடித்து வாய், கண், மூக்கு கட்டிப் புகையிடவும்.

### 23. புண்ணுக்கு, சூலைக்கு ரசப்பொடி

இரசம் சுத்தியானது. களஞ்சு இரண்டு பச்ச வெற்றிலைச் சாற்றில் முறிச்சு உழக்கரிசி குறுவை அரிசி நனையத் தக்கது. பச்சை வெற்றிலைச் சாறு விட்டு, இரவு முழுவதும் நனைய

விட்டு விடி வேறு அதில் இருந்த சாறு ஊற்றி, ஈரம் உலர நிழலுலர்த்தி மூவிலை முன்னியைக் கூட்டாமல் மற்ற மின்னி இலையைக் கூட்டி ஒரு பிடி முசுமுசுக்கை இலை ஒரு பிடி பச்சை வெற்றிலை எட்டு, ஒன்பது இதுகள் செருக்கு வாடப் போட்டு எடுத்து இலையும், அரிசியுமிடித்து மாவான பக்குவத்திலே இரசம் விட்டு, ஒரு சாமம் இரண்டு உலக்கை போட்டு, கை ஓயாமல் இடித்து, மாவைப் புதுக் கலசத்திலிட்டு நிழலுலர்த்தி நாளொன்றுக்குக் களஞ்சிப் பிரமாணம் எடுத்து பசுவின் தயிரால் விட்டு, மூன்று உருண்டை உருட்டி 7 நாள் இந்தப் படியே கொள்ளவும். பத்தியம் தயிருஞ் சோறுமல்லாமல் வேறொன்றுமாகாது. வயிற்றில் இரத்த வேகத்தைத் தாக்கி ரத்தங் கழிஞ்சால், தயிரிலே வெல்லம் போட்டுக் கரைத்துக் கொடுக்கவும்.

உப்பு, புளிப்பும் கைப்பு 21 நாள் காக்கவும். பிறகு உப்புப் புளி கூட்டவும். பத்தெட்டு முழுக்கு விளக்கெண்ணையிட்டுக் குளிர்ந்த தண்ணீரில் அடிக்கடி முழுகி வரவும். சூலை புண்ணுந்தீரும்.

### *24. கெந்தகத்தயிலம் சூலைக்கடுப்புக்கு*

சுத்தி பண்ணின கெந்தகம் பத்துவராகன் பசுவின் நெய் விட்டு ஒரு சாமமரைத்து வெள்ளீய சீலையில் தடவித் திரியாகச் சுருட்டி நெய்யிலே விளக்கெரிக்கத் தயிலம் விழும். அந்தத் தயிலம் விட்டுச் சுத்தியான இரசம் நாலு வராகன் ஒரு சாமமரைத்து ஒரு பரணியிலே இட்டு வைத்துக்கொண்டு காலையில் நாளொன்றுக்கு ஒரு காசிடைத் தயிலம் பத்து நாள்கொள்ளக் கடுப்பு முதலான வியாதி தீரும்.

**பத்தியம் :**

மதுர ஆகாரம், இந்தரசம் கூட்டிப் பத்தியத்துடனே நடக்கவும், உப்பு, புளி, எண்ணை, கைப்பு ஒரு மண்டலந் தீண்டாதிருக்கவும் தீரும்.

### 25. சூலைகுடாரம்

| | |
|---|---|
| செம்புப்பற்பம் | பதினாறு கழஞ்சு |
| கெந்தகம் | எட்டுக் கழஞ்சு |
| அப்பிரக சிந்தூரம் | நாற் கழஞ்சு |
| இரசம் | இரு கழஞ்சு |

இவையெல்லாம் எலும்பிச்சம் பழச்சாற்றிலே அரைத்து, வெய்யிலிலே உலர்த்திப்பனிப்பயரதின் பிரமாணம் இஞ்சிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு கருப்புக்கட்டி இவைகளிடவும்.

### 26. சூலைக்கிடி மருந்து

செங்கத்தாரிப்பட்டை
வன்னிப்பட்டை
குப்பைமேனி
மணத்தக்காளி இலை
நொச்சியிலை
கழற்சிக்கொடி இலை
செருப்படி இலை
கோழி அவரை இலை
துளசி இலை

இவை எல்லாஞ் சாறு கொண்டு, சாறு வார்த்து இரண்டு வகைப் பட்டையும் இடித்துப் பதமான பிறகு இரசம் கழஞ்சு கூட விட்டு 1½ நாள் இடித்துப் பதமான பிறகு வாங்கி வைத்துக்கொண்டு தினம் நான்கு பணவிடைக்கொள்ளவும். ஆறு நாட்கள் காலை, மாலை இரண்டு நேரமும் கொள்ளவும். ஏழாம் நாள் விளக்கெண்ணை வார்த்துப் பொருக்கு மண் இட்டு முழுகிப் போடவும்.

**பத்தியம் :**

நெத்தோலி இருமுளி, முருங்கைஇலை கிள்ளுக்கீரை, ஈரவெங்காயம், பசுவின்பால், கைப்புப் புளிப்பு, உப்புக்

கூட்டாமல் இருக்கவும் தீரும். வெந்நீர் நடமாடவும். 7 நாளைக்கு மேல் வெந்நீர் விட்டு விடவும்.

### *27. பஞ்சாக்கினி சூலைக்கு*

புளி நரளைக் கிழங்கு
பிரண்டைக் கிழங்கு
கொடிவேலி வேர்
மருள் கிழங்கு
காட்டுக் கருனைக் கிழங்கு

இவை தன்னிலொக்க உலர்த்திப்பொடி பண்ணிப் புளித்த மோரிலே விடிவேறே முக்கழஞ்சு மருந்து போட்டுக் கலக்கிக் கொடுக்கவும்.

### *28. சூலை கடுப்புக்கு*

| | |
|---|---|
| கருநொச்சிலிலை | ஒரு பிடி |
| பொடுதலை | ஒரு பிடி |
| களச்சியிலை | ஒரு பிடி |
| எருக்கங் கொழுந்து | 3 |
| சிறு செந்தொட்டி | ஒரு பிடி |
| குப்பைமேனி | ஒரு பிடி |
| கையாந்தகரை | ஒரு பிடி |

இவை எல்லாம் இடித்துப் பொடி பண்ணிக் காலை, மாலை ஒன்பது நாள் கொடுக்கவும்.

**பத்தியம் :**

உப்புத் தவிரவும்.

### *29. சூலைக்குங், கடுப்புக்கும் எண்ணெய் வகை*

| | |
|---|---|
| ஆமணக்கெண்ணை | இருநாழி |
| கல்லுப்பு | இருநாழி |
| அரிதாரம் | 1 களஞ்சு |
| கெந்தகம் | 1 களஞ்சு |
| ரசம் | 1 களஞ்சு |

இதை உப்பிலே கலந்து உப்பைப் புதுச் சட்டியில் வைத்து ஒரு சட்டி கொண்டு மூடி சீலைமண் செய்து கரியாகும் அளவிற்கு அதை எரியிட்டுக் கரியாகச் சென்ற பின்பு அந்த எண்ணை இரு மொழி அதுக்குள்ளே விட்டுக் கொதிப்பித்து வடித்துக் கொள்ளவும். இந்த எண்ணையைத் தினம் ஒன்றுக்கு ஆழாக்கு உட்கொண்டு வரவும். வெந்நீர் பரிமாறவும். வெந்நீர் குளிக்கவும்.

### 30. குன்ம சூலைக்கு

| | |
|---|---|
| உள்ளி | குறுணி |
| ஆமணக்கெண்ணை | குறுணி |
| சிந்தாமணக்கெணஅணை | குறுணி |

பெருவாகை உள்ளில் நரம்பு
பெருங்குமிழ், புன்னை,
பாதிரி
சாறுவளை
சித்தமல்லி
பேர்மல்லி
சிறுவழுதலை
கண்டங்கத்தரி
நெருஞ்சில்
நிலவாமணக்கங்கிழங்கு
சிவதை வேர்
யாலறுவாயன்
மூக்கறட்டை
கொடிவேலிவேர் களருவாய்
ஆயிலப்பட்டை
புங்கம்பட்டை
முடக்கொத்தான் சமூலம்

இந்த மருந்து ஒவ்வொன்றும் முந்நாழி நெல்லிடைக் கூட்டி,

கடுக்காய் -50
தான்றிக்காய் -50

ஊறிய நெல்லிப் பருப்புக் கூட்டி, குறுணி ஆமணக்கெண்ணைக்கு இருகலத் தண்ணீரிலே இந்த வெட்டு மருந்துகள் இடித்துக் கஷாயமிட்டு எட்டொன்றாகக் காய்ச்சி எண்ணை கலந்து வெள்ளுள்ளி திரிதூணிப்பருப்பு, இதற்குப் 16 மரக்கால் நீர் வார்த்துக் கஷாயமிட்டுத் தூணியாகக் காய்ச்சி ஆயச்சீலையிலே தேயாமல் சாரத்தை வடித்துக்கொண்டு முந்தின கஷாயத்தில் கூட்டிக் குறுணிப் பசுவின் பால் கலந்து,

| | |
|---|---|
| பெருங்காயம் | பலம் 1 |
| கடுகு ரோகிணி | பலம் 1 |
| இந்துப்பு | பலம் 1 |
| காசிலவணம் | பலம் 1 |
| பிடலவணம் | பலம் 1 |
| சைந்தவ லவணம் | பலம் 1 |
| சுவர்சலவணம் | பலம் 1 |
| சத்தியவட்சாரம் | 4 காசியிடை |
| யலட்சாரம் | ,, |
| சுக்கு | ,, |
| முளகு | ,, |
| திப்பிலி | ,, |
| அசமதாகம் | ,, |
| திப்பிலி மூலம் | ,, |
| செவியம் | ,, |
| சிற்றரத்தை | ,, |
| பேரரத்தை | ,, |

கூட்டிப் பசுவின் பால் வார்த்த்ரைத்துப் பக்குவத்திலே எண்ணை வடித்துக் கொள்ளவும். தினந்தோறும் 4 காசிடை எண்ணை நக்கவும். உதரத்திலே பிறந்த வியாதிகள் எல்லாம் நிற்கும்.

கஷாயமும் மருந்தும் எண்ணையுங் கூட்டிக் காயுறபோது, இருநாழி எண்ணை மீட்டு, உழக்கு சதிரக்கள்ளிப்பால் வார்த்தரைத்து எண்ணை செய்து ஒரு காசத்தனை எண்ணைப் பசுவின் பாலில் கூட்டி நக்க விரோசிக்கும். **மாத்து:** மோரும், சோறும் அசனம் பண்ண நிற்கும்.

தள்ளினால் நெல்லிப் பருப்பு மோரிலே அரைத்துக் கொடுக்க நிற்கும்.

வாதசூலை, குன்மம், அருவை, கவிசை, நீராமை, வல்லை மற்றும் வயிற்றில் பிறந்த வியாதிகளெல்லாம் நிற்கும். இப்படி உள்ளி ஆமண்ணை விடவும்.

அருவை, கவிசை, எதிரக் கவிசை, நீராமை, உள்நீர்க்கோவை, பிறநீர்க்கோவை, நீர்க்கோவை வலம் மகோதரம், சலமகோதரம், ஆணாகம், பெண்ணாகம், குளுப்பை, பெருவயிறு, காமாலை, விஷப்பாகம், நாகப்பாம்பு, குன்மம், வயத்திலே எத்தனை வியாதி உண்டோ அத்தனையுந் தீரும்.

### *31. சூலை குன்மங்களுக்குப் பாவட்டை எண்ணெய்*

| | |
|---|---|
| பாவட்டைச்சாறு | நாழி |
| வெள்ளுள்ளிச் சாறு | நாழி |
| கொட்டைக்கரந்தைச் சாறு | நாழி |
| கொத்தான் சாறு | நாழி |
| ஆடாதொடைச் சாறு | நாழி |
| கொடிகழற்சாறு | நாவி |
| உரிபாவட்டைவேர் | 2 கழஞ்சி |

அரைத்துக் கரைத்து ஆமணக்கெண்ணெய் இருநாழி புகட்டிப் பதத்தில் வடித்து நக்கவும். சூலை, குன்மம், குடல்வாதம், இவை தீரும்.

## 32. குன்ம சூலைக்கு மெதுக்கொள்ள

| | |
|---|---|
| பெருங்காயம் | 1 பங்கு |
| வசம்பு | 2 பங்கு |
| கொடிவேலி | 4 பங்கு |
| அசமதாகம் | 5 பங்கு |
| கடுக்காய் | 6 பங்கு |
| திப்பிலி | 7 பங்கு |
| கோட்டம் | 8 பங்கு |
| மிளகு | 9 பங்கு |
| சிவதைவேர் | 10 பங்கு |

இவை எல்லாங் கூட்டி வேக கொட்டிற் கொண்டு பொடி செய்து, வஸ்திரகாயம் செய்து வெருகடிப் பிறமாணம் நெய்யிலாகுதல் இளவெந்நீராகுதல் கொள்ளவும். சுவாசகாசம், மந்தாக்கினி, க்ஷயபாண்டு, விரோசனம், குன்ம சூலை இத்தனையும் போக்கும்.

## 33. கபால சூலை-தலைவலி-பிடரிகனப்பு-ஒருத்தலைவலிக்கு

கபாலசூலை, தலைவலி, பிடரிகனப்புக்கு அரிதாரம், சுக்கு, இலுப்பை, பிண்ணாக்கு, மஞ்சள், இவை பொடி செய்து வேலிப்பருத்திச்சாறு சிலையிலூட்டி நிழலுலர்த்தாக உலர்த்தி, உலர்ந்த சிலையுடன் சரியாகக் கடுதாசி கூட்டிப் பொடியைச் சீலையிலுங் கடுதாசியிலுமூட்டித் திரித்துப் புகை இடவும், இதற்குத் தலைவலி, கபாலசூலை, தலைக்கனப்பு, நாசியடைப்பு, தண்ணீர் விழுகிறது. இது வெல்லாந் தீரும்.

## 34. ஒருத் தலைவலிக்கு

மாடப்புறாவினெச்சம் பொடி பண்ணித் தேய்க்கவும் தீரும். பச்சைக்கடுகு அரைத்து நல்லெண்ணெயில் குழப்பித் தேய்க்கவும்.

### 35. மண்டை சூலைக்கும், சாமாலைக்கும் மருந்து

பொடுதலைச் சாறு
நல்லெண்ணெய்
மிளகு

பொடி பண்ணிக் கூடப்போட்டு 7 நாள் கொடுக்கக் குணமாம்.

**பத்தியம் :**
உப்புப்புளி ஆகாது. கை கண்டது.

### 36. புகை மருந்து (சூலை ஒட்டிய புண் முதலானதுக்கு)

| | |
|---|---|
| பச்சை நாபி | |
| வெள்ளைப் பாஷாணம் | பலம் ¼ |
| கெவுரிப் பாஷாணம் | பலம் ¼ |
| தொட்டிப் பாஷாணம் | பலம் ½ |
| வங்காளப்பச்சை | பலம் ½ |
| சாதிலிங்கம் | பலம் ½ |
| அரிதாரம் | பலம் ½ |
| சீனக்காரம் | பலம் ½ |
| நெடி நமட்சாரம் | பலம் ½ |
| யவட்சாரம் | பலம் ½ |
| மிருதார் சிங்கி | பலம் ½ |
| அஞ்சனக்கல்லு | பலம் ½ |
| கருங்குலியம் | பலம் 1 |
| காந்தம் | பலம் ½ |
| காரீயம் | பலம் 3 |
| கெருடபச்சை | பலம் ½ |

ஈயம் விளக்கெண்ணெய் விட்டு உருக்குகிறபோது ரசம் விராகனிடை விட்டு உருக்கித் தரையில் சாய்க்கிறது. இதுவும் மருந்துகளும் கூட்டி எருக்கம்பால் வார்த்தரைத்து ஒன்பது பங்கிட்டுச் சீலையிலெருக்கம் பாலூட்டி ஒன்பது பங்காக முடிந்து ஆறு புகை 3 நாளைக்கிப் புளியஞ்சிராய்

தணலில் புகை போடவும். அன்றைக்குத் தீராதிருக்கும். மறுநாள் நோய் கெடும். மூன்றாம் நாள் நோய் தீரும். ஒரு நாள் ஆறவிட்டு ஐந்தாம் நாள் விளக்கெண்ணெய் விட்டு முழுகவும்.

**பத்தியம் :**

ஆறின சோறும், தண்ணீர், வெங்காயம் கூட்டி அசனம் பண்ணவும்.

**முழுகின பின்பு பத்தியம் :**

நெய் தோலிக் கருவாடு, சுறாக்கருவாடு, வெள்ளாட்டு உப்புக் கண்டம் ஆகும். புளி, மிளகு, உப்பு ஆகாது.

இது இரண்டு நேரமும் முழுகவும். முழுகச் சத்துவமில்லை என்றால் தண்ணீரெடுத்து விடவும்.

**இதுக்குத்தீரும் வியாதி :**

சூலை, ஒட்டிய புண், வாதசூலை, அண்டவாதம், திமிர்வாதம், தினவுள்ள வெள்ளைக் குஷ்டம், கருங்குஷ்டம், மண்டைசூலை, செவ்வட்டைக்கடி, கடிகைசீழ்க் கட்டினது, பிளவை, தண்டுப்பிளவை, காணாக்கடி இவை எல்லாந் தீரும்.

15 நாளைக்குச் சுடுசோறும், வெந்நீரும் ஆகாது. புகை அமட்டினால் பசுவின் பச்சைபயிறு கஞ்சி காய்ச்சிக் குடிக்கவும். அறவே அமட்டினால் நறுவளிக் கொழுந்து அரைத்து எருமைத் தயிரில் கொடுக்கவும்.

### 37. சூலை வியாதிக்குச் சுரசம்

இரசம் பலம் 1
வெள்ளைப்பாஷாணம் பலம் 1
அதிமதுரம்
களிப்பாக்கு
கீழாநெல்லிவேர் இவை சமன் கூட்டி அரைத்து 7 உருண்டைகளாக்கிப் புளியஞ்சிராய்த் தணலிலாவது கொட்டாங்கச்சித் தணலிலாவது 3 நாள் புகைக்கவும்.

### 38. வாதசூலைக்கு சந்துவாத கரப்பானுக்கு வேதுபிடிக்க

அடப்பம்பட்டை
பிரப்பங் கிழங்கு
வெள்ளறுகு
சங்கம் வேர்
மாவிலங்கம் பட்டை
அழிஞ்சில் வேர்
கோவைத் தண்டு
முதியார் கூந்தல்
இலுப்பைப்பட்டை

வெட்டு மருந்து இந்த ஒன்பது வகையும் சமன் கூட்டி நறுக்கிப் பிடித்துப் பானையில் இட்டுக் காய்ச்சி வேது பிடிக்கவும். ஆறிப்போனால் செங்கல் காயப்போட்டு அந்தப் பானையிற் போட்டுப் பிடிக்கவும்.

**இதுக்குத் தீரும் வியாதி :**

வாதசூலை, வாதகரப்பான், சூலைக்கடுப்பு, சுறோணிதக் கடுப்புத் தீரும். கை கண்டது.

### 39. வாதசூலைப்புண், ஆறாதபுண், கடிவிஷம், பிளவைக்கு

உசிலம்பட்டையை கொண்டு வந்து காயப்போட்டு, இடித்து வஸ்திர காயம் செய்து தினம் வெருகடிப் பிரமாணம் 10 நாள் கொள்ளவும், கைப்புப்புளிப்புத் தவிரவும்.

### வேறு

நீர்க்கோவையை வெள்ளாட்டுக் கோமியத்திலொரு பாக்களவு கய்ச்சிக் கொடுக்கவும். ஒருநாள் விட்டு ஒருநாள் கொடுக்கவும். கைப்புப் புளிப்புத் தவிரவும்.

### 40. வாதசூலை முதலானதுக்கு, கெந்தகச் சூரணம்

கெந்தகம் சுத்தி பண்ணினது பலம் 3 **சுக்கு**, திப்பிலி, மூலம், செவியம், சித்திர மூலம், ஏலம், இல**வங்கம் பத்**திரி,

இலவங்கப்பட்டை, சிறுநாகப்பூ, இரும்பு, ஓமம், சாதிக்காய், சாதிப்பத்திரி, மிளகு, தேவதாரம், சித்திரத்தை, கோஷ்டம், விளங்கம், சிறுதேக்கு, தாளிசப் பத்திரி வகைக்குப் பலம், சங்கு, வெள்ளறுகு, சிவனார்வேம்பு, செங்கத்தாரி, மிளகரணை, பொன்முசுட்டை, ஊசி மல்லிகை, அமுக்கிறா, சத்திச் சாரணை, பிரப்பங் கிழங்கு பலம் - 1, பரங்கிப்பட்டை பலம்-1, இவையெல்லாம் இடித்து வஸ்த்திர காயம் செய்து வெருகடிப் பிரமாணம் இரண்டு நேரமுங் கொள்ளத் தீரும் வியாதி வாத சீலை, மேக சூலை, வெடி சூலை, கபால சூலை, பிரமேக மூத்திரக்கிரிச்சம், புண் குடோரம், புண் குஷ்டம், விஷக்கடி, வண்டு கடி, சொரி இவை எல்லாந் தீரும். இரச முறிவு, ரசக்கட்டு, இரசவெறி இவையெல்லாந் தீரும்.

**பத்தியம் :**

முளைக்கீரை, துவரம் பருப்பு, மிளகுள்ளி, பசுவின் நெய், வெள்ளாட்டுப் பாலிது கூட்டவும்.

### *41. கெந்தகச் சூரணம்*

இலுப்பைப்பூ, இலுப்பை நெய், இலுப்பைக்கடி, வாழைக்காய், வாழை இலை வாழைப்பூ இதுகள் சமூலமொரு மண்டலத்துக்காகாது. மருந்து அரைமண்டலந் தின்றால் அரை மண்டலம், மறு பத்தியம், உப்பு, புளிப்பு, புகையிலைத் தள்ளவும்.

### *42. பக்க சூலைக்கு*

**கழல் சதை**
**கண்டங்கத்திரிவேர்**
**அசமதாகம்**
**சீரகம்**
**சாறுவளைவேர்**
**வசம்பு**
**உள்ளி**

இவைகளை அரைத்து வெந்நீரில் கொடுக்கப் பக்க சூலை நிற்கும்.

### 43. வேறு

| | |
|---|---|
| வெள்ளுள்ளி | 100 பலம் |
| சுக்கு | 1 பலம் |
| மிளகு | 1 பலம் |
| திப்பிலி | 1 பலம் |
| பெருங்காயம் | 1 பலம் |
| சத்தியவட்சாரம் | 1 பலம் |
| யவட்சாரம் | 1 பலம் |
| திப்பிலிமூலம் | 1 பலம் |
| சாதிக்காய் | 1 பலம் |
| கோரையரிசி | 1 பலம் |
| சதகுப்பை | 1 பலம் |
| கழல்பருப்பு | 1 பலம் |
| பஞ்சலவணம் | 1 பலம் |
| அசமதாகம் | 1 பலம் |
| கடுகு | 1 பலம் |

இந்த மருந்துகளுடன் எள்ளு உழக்குக் கூட்டி இது எல்லாம் பொடி செய்து வெள்ளுள்ளித் திரியரைத்து கலந்து எண்ணெய் உரி, பசுவின் நெய் உரி கலந்து கடுகாகப் பண்ணிக் காலமே வெந்நீரில் களிப்பாக்களவு கொள்ளப் பக்கசூலை, சுவாச காசமும் நிற்கும்.

### 44. பக்கசூலை வாய்வுக்குக் கெந்தகச் சூரணம்

| | |
|---|---|
| நல்ல உப்பு | பலம் 1 |
| கெந்தகம் | பலம் ½ |

உப்பையார்க்கப் பொடி பண்ணி கரண்டியிலிட்டு அரைப்பலம் கெந்தகத்தையும் பொடி பண்ணிக் கூடக் கோத்துருக்கி இரும்புக் கழியாலே கிண்டி கலுவத்திலே வைத்துப் பொடிபண்ணி வேளைக்கு ½ வராகனிடை மோரிலனுபான விஷேத்தில் கொடுக்கவும். பக்கசூலை வாய்வும் தீரும்.

### 45. கரச்சூலைகருக்காயம்

காயம்
ஆயில்
கூவளை
கடுக்காய்
விலாலரிசி
வேர்க்கொமட்டி
திப்பிலி
மஞ்சள்

ஓரொன்று பலமுள்ள பேர்க்குக் களஞ்சு, பலங்கெட்ட பேர்க்கு ½ கழஞ்சு கொண்டு அரைத்துக் கரைத்துக் கஷாயமாகக் காய்ச்சிக் கொடுக்கவும்.

கொன்றை கொடுவேலாயில் கூவளை சாரணை பலம் 5 கடுக்காய், சுக்குத் திப்பிலி, மிளகு, கடுகுரோகணி, நேர்வாளம், இந்துப்பு, உள்ளி பலம் 3. மற்றுள சரக்குப் பலம் 2. கூட்டி சித்தாமணக்கெண்ணையில் வடித்து தர நச்சுச்சூலை தீரும். மஞ்சள் சுட்டுப் பொடி செய்து மேல் பொடியிட்டுக் கொள்ளவும். சீராம் கைகண்டது.

### 46. நிதம்ப சூலைக்கு மருந்து

| | |
|---|---|
| முடக்கத்தான் சாறு உரி | |
| நல்லெண்ணை உரி | |
| வேர்கொம்புள்ளி | ½ கழஞ்சு |
| வசம்பு | ½ கழஞ்சு |
| பெருங்காயம் | ½ கழஞ்சு |
| கடுகு | ½ கழஞ்சு |
| இந்துப்பு | ½ கழஞ்சு |
| கன்னசாலை | ½ கவஞ்சு |
| குந்திருக்கம் | ½ கழஞ்சு |
| தேவதாரம் | ½ கழஞ்சு |
| சதகுப்பை | ½ கழஞ்சு |

கொண்டரைத்துக் கரைத்து மெழுகுப் பதமாக வடித்து ஒன்றரைச் சிரங்கை நக்கிவர நிதம்பசூலை தீரும்.

### 47. யோனி சூலைக்குச் சூரணம்

| | |
|---|---|
| இந்துப்பு | 1 பணவிடை |
| நற்சீரகம் | 2 கழஞ்சு |
| சுக்கு | 1 கழஞ்சு |
| திப்பிலி | 4 கழஞ்சு |
| கடுக்காய் | 8 கழஞ்சு |

இது பொடி செய்து ஒரு குத்துப்பொடி மோரில் கொடுக்கவும். இதுக்குத் தீரும் வியாதி, யோனிசூலை, வாதகுன்மம், பிடரிவலி, வயிற்றுப் பொருமல், குடல்வாதம் விக்கல் இவையெல்லாம் தீரும்.

**பத்தியம் :**

கைப்புப் புளிப்பு விடவும்.

### 48. காசச்சூலைக்குக் கஷாயம்

கூவளை
கொடிவேலிவேர்
கடுக்காய்
விழலரிசி
வேர்க்கொம்பு
திப்பிலி
மஞ்சள்

இவை ஓரொன்று பலமுள்ள பேர்க்குக் கழஞ்சு, பலங்கெட்ட பேர்க்கு ½ கழஞ்சு கொண்டு அரைத்துக் கரைத்துக் கஷாயமாகக் காய்ச்சிக் கொடுக்கவும்.

### 49. சூலைக்கட்டுக்கு கைகால் குடைச்சலுக்கு மருந்து

உளுந்தினுன் மாவு
நிலைப்பனைக்கிழங்கு

சர்க்கரை இவை பசுவின் பாலில் கலந்து கொள்ளவும். இச்சாபத்தியம் இதற்குக் கைகால் குடைச்சல் சூலைக்கட்டு இவை தீரும்.

## 50. சூலைவாய்வுக்கு மருந்து

| | |
|---|---|
| கெந்தகம் | 5 விராகன் |
| சூதம் | 3 விராகன் |

கெந்தகம் முன்னே உருகும் பொழுது 3 விராகனிடை ரசத்தையுங் கூட விட்டுக் குப்பைமேனிச்சாறு நாலுதுளி விட்டு வேப்பங்கழியாலே கடைந்து சூலை இலையில் சாய்த்துப் பொடி செய்து அனுபான விசேஷத்தில் கொடுக்கவும். சூலை வாய்வு சகலமுந் தீரும்.

## 51. முடங்கு சூலைக்கு மருந்து

| | |
|---|---|
| நல்ல வேம்பு | 6 பலம் |
| மலை வேம்பு | 6 பலம் |
| சிவனார் வேம்பு | 6 பலம் |
| நிலவேம்பு | 6 பலம் |
| கருவேப்பிலை | 6 பலம் |

இது சேரக் காயப்போட்டு இடித்து வடிகட்டிச் சூரணம் பண்ணி வெருகடிப் பிரமாணந் தின்று, வெந்நீர் குடிக்கவும். இப்படி 24 நாட்கள் குடிக்கவும்.

**பத்தியம் :**

புளி, புகை தவிர்க்கவும்.

## 52. வெள்ளைவாகடத்தில் சூலைக்கடுப்பு, பரங்கிப் புண்ணுக்கு

நாள்பட்ட வேப்பமரத்தின் பட்டை 20 பலம் வெட்டிச் சிறுகச் சிறுகத் தரிச்சிப்பஞ்சு போலே இடித்து மூன்று மரக்கால் தண்ணீர் விட்டு 5 நாள் சூரியப்பிடத்திலே வைத்துப் பிசைந்து பிழிந்து வடித்து நாலொன்றாகக் காய்ச்சி இதில்

நெய்யிருநாழி, வேப்பெண்ணெய் நாழி, பச்சை வெற்றிலை மணத்தக்காளி நொச்சி வேலிப்பருத்தி, தையவேளை முடக்கொற்றான், குப்பைமேனி இந்தச் சாறுகளிலே ஓரொன்று உரிவிட்டுச் சிவனார் வேம்பு, சிறுகுருஞ்சி, பெருமருந்து, துளசி, நொச்சி, தைய வேளை, நாரத்தை, அழிஞ்சில், காட்டு மல்லிகை, தூதுவளை, வேலிப்பருத்தி, செங்கத்தாரி, முடக்கொத்தான் செருப்படி, குப்பைமேனி, சாரணை ஓரொன்று வோர் கழஞ்சுப் பால்விட்டரைத்து வெண்காரம், சீரகம், ஓமம், சதகுப்பை, வெள்ளுள்ளி, சீனக்காரம், குடசப்பாலை, பூதவிருட்சம், காசுக்கட்டி, குங்கிலியம், செண்பக மொட்டு ஓரொன்று ஒன்றரை விராகன் கூட்டிக் களிப்பாக்குப் பத்தும் சேர் எலுமிச்சம்பழச்சாறு விட்டரைத்து நெய்யிலெரியிட்டுக்குக்குலுச் சுத்தியானது அஞ்சு கழஞ்சு, இரசம் இரண்டு கழஞ்சு, கெந்தகம் 2 கழஞ்சு, கெவுரி கால் கழஞ்சு, துருசு கழஞ்சு இதை எலுமிச்சம் பழச்சாறு விட்டு மைபோலே அரைத்து வடித்த கிருதம், ஆறவிட்டு அதில் கூடக் கலந்து மூன்றுநாள் சென்ற பிறகு இரண்டு நேரமும் கொண்டு வரப் பரங்கிச் சூலை தீரும். ஒரு மண்டலங் கொள்ளவும். உப்புப் புளி, எண்ணெய், கைப்புத் தவிர்த்து பத்தியத்திலே வரவும்.

### 53. வேறு

இரசங்கழஞ்சு
சாதிலிங்கம் இருகழஞ்சு
கெந்தகம் நாற்கழஞ்சு, இந்த மூன்றும் கல்வத்திலிட்டுப் பொடி பண்ணி நாழிப் பசுவின் நெய்யில் சிறுகச் சிறுக விட்டு அரைத்து நெய்யெடுத்துக்கொண்டு இரண்டு நாள் ஆறவிட்டு உடம்பிலே தடவினால் வேர்வை எடுக்கும். வேர்வை எடுக்க மட்டும் வாட்டி மாலையில் வெந்நீரில் குளிக்கவும். இந்தப்படி ஆறுமட்டும் பண்ணிவரத் தீரும்.

### 54. இருது சூலைக்கு எண்ணெய்

சவுட்டுமண்படி

ஒரு சட்டியில் வேறே ஊறப்போட்டு, ஒட்டடை ஒருபடிவேறே ஊறப்போட்டு, இவை இரண்டு வகையும் வேறே. வேறே மேலிருக்கிற தெளிவை இறுத்திக் கொண்டு, காசிடை

| | |
|---|---|
| சுண்ணாம்பு | |
| பெருங்காயம் காசிடை | 1 |
| ஒரு வெள்ளைப்பூண்டு | |
| இலுப்பைக்கட்டி காசிடை | 1 |
| நல்லெண்ணெய் சேர் | ¼ |
| பூவரசுவேர் சேர் | ¼ |

கலந்து வீட்டுக்குப் பிறம்போன மூன்று நாளுங் குடித்தால் மலட்டுப் புழு இறந்துவிழும். சந்தானமுண்டாகும்.

## 55. சூலைகடுப்பு-இடுப்புவலி-முதலான வியாதிக்குப் பறங்கிப்பட்டைச் சூரணம்

பறங்கிப்பட்டைச் சூரணம் பண்ணி அந்த நிறைக்குச்சரி சுக்கு, மிளகு, திப்பிலி மூலம் தும்பிராஷ்டம். இது சரி எடை சூரணம்பண்ணி இரண்டு சூரணமும் கலந்து காலமே தேனில்க் கொள்ள இடுப்பு வலியுந் தீர்ந்து உடம்பு புஷ்டியாயிருக்கும்.

## 56. வெள்ளைப் பொடி 18 காசத்துக்கும் பலநசலுக்கும் மருந்து

| | |
|---|---|
| துருசு விராகன் | 2 |
| வெள்ளைக் காகணம் வேர் | விராகன் - = 2 |
| ஆணிதள்ளி வேர்ப்பட்டை | விராகன் - = 2 |
| சிறுக்கீரைவேர் | விராகன் - = 2 |
| ஓரிலைத்தாமரை வேர் | விராகன் - = 2 |

இவை எல்லாந் தண்ணீர் வார்த்தரைத்துச் சட்டியிலே அடைபோலே தட்டி மறுசட்டி கொண்டு மூடி அடுப்பிலேவைத்து ஒரு சாமம் நன்றாக எரியிட்டுப் பார்க்கத் திருநீராய் வெண்மையுண்டாம். அதை எடுத்துப் பரணியிலே அடைத்து வைத்துக்கொண்டு நிமை பிரட்டி மருந்திடவும்.

இதுக்குத் தீரும் வியாதி, நத்தை படலம், பாலாடைக்காசம், காசம், முழிமுழுங்கி பூப்பட்டது, ஆணிப்பூ, குந்தம், சதை வளர்த்தி அமரன் 18 வகை காசமே படர் நாசமே.

### 57. காசமிருமலுக்குத் தூதுவளை எண்ணெய்

தூதுவளைச்சமூலம், திருத்துழாய்ச் சமூலம், கங்கரங்கோரைச் சமூலம், இசங்கு சமூலம், இண்டிலை, கழக்கொடியிலை, இன்பூராவேர், தூதுவளைப்பழ நாழியில் வேக, அரைத்துக்கரைத்துத் திப்பிலி, பூதகரப்பான் இந்துப்பு இவை எண்ணெயிற் கூட்டிப் பண்ணி நக்க இருமல், க்ஷயரோகந்தீரும்.

### 58. சுவாசகாச இருமலுக்கு மருந்து

முள்ளுக்கத்திரி வேர்ப்பட்டை அரைத்து வைத்துக்கொண்டு வெருகடித்தூள் நானாழி நீரில் கஷாயமிட்டு, ஒரு சிறங்கையானவாறேயிருந்து வெண்காரம் பொரித்து பணவிடைத்தூள் தூவிக்கொடுக்கவும். சுவாசகாசம், இருமல் தீரும். கைகண்டது.

### 59. குண்டலியாதி லேகியம் காச சுவாச முதலான பலரோகத்துக்கு

| | |
|---|---|
| தான்றிக்காய் | 2 பலம் |
| நெல்லிப்பருப்பு | 2 பலம் |
| சாதிக்காய் | 2 பலம் |

இவை எல்லாஞ் சூரணம் பண்ணி லேகியத்திற் கலந்து தேன் காய்ச்சிக் குளிர ஆறவிட்டுத் தேன் படி-1 கலந்து, சர்க்கரை பலம் 16 கலக்கவும். இந்த லேகியம் இரண்டு நேரமுங் கொள்ளவும். காசசுவாசம், சோகை சூலை, ருத்திர ரோகம், விக்கல், குன்மம் பீலிகை, மகோதரம், கிராணி, அலோரி, ஆமறுபயித்தியம், சிலேஷ்மம், சுவாசகாசம், க்ஷயம் முதலான ரோகந்தீரும்.

### 60. தாளகபற்பம் சுவாசத்துக்கு

தாளக பற்பங் கோவைச் சர்க்கரை பலம்-2. தாளகம்-பலம் 2. வெற்றிலைக்காம்புச் சாற்றில் பத்து நாழிகை அரைத்து வில்லைப் படித்து உலர்த்திக் காகிதத்தில் வைத்துச் சுருட்டி அதன் மேல் புளியம் பிறாணி சாம்பல் குழைத்து மூன்று திரம் பூசி அதன் மேல் நாலு சீலை மண் செய்து முழக்குழி வெட்டி எருவாக்கி அதன்மேல் வைத்து மேலும் எருவடுக்கிப் புடமிடவும். பஸ்பமாகும். ஆறவிட்டெடுத்து வாத சுவாச காசத்துக்குத் தேனிலிடவும். தீரும்.

### 61. சுவாச காசத்துக்கு மருந்து

ஆடாதொடை, சங்கிலி, தூதுவளை, முருங்கிலை இந்த நாலிலையும் சமனாகப் பிட்டு வைத்துப் பிழிந்து, இறுத்துக்கொண்டு சுக்கு, திப்பிலி, மிளகு மூன்றும் சமனாய்ப் பொடி பண்ணி வெருகடிப் பிரமாணம் அந்தச்சாற்றிலிட்டு நாலு துளி, அஞ்சு துளித் தேன்விட்டுச் சாப்பிடுகிறது. சுவாச காசங்கள் தீரும். கை கண்டது.

### 62. சுவாச காசத்துக்கு, அஷ்தி சூரத்துக்கு, இருமலுக்கு தாளீசச் சூரணம்

தாளீசபத்திரி - திரிகடுகு
இருசீரகம்-ஓமம்-அறத்தை
இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி
சிறுநாகப்பூ, பெருநாகப்பூ
கிராம்பு, ஏலம்
சாதிக்காய், கடுக்காய்
தான்றிக்காய், சந்தனம், வெட்டிவேர்,
இலாமிச்சம்வேர்

இவை கூட்டிச் சூரணஞ் செய்து சர்க்கரை, தேன் கலந்து கொள்ளவும். இதற்குத் தீரும் வியாதி அஸ்திசுரம், இருமல், சுவாசம் இவை தீரும். கை கண்டது.

### 63. சுவாசகாசத்துக்கு

பசுவின் நெய்படி 1
ஆடாதொடைச் சாறுபடி 1/8
கண்டங்கத்திரி சமூலமுந்துவைச்ச சாறுபடி 1/8
முள்ளிஇலைச்சாறு 1/8
கையாந்தகரைச்சாறு படி 1/8
சீந்திக்கொடிசாறுபடி 1/8
சாறணை இலைச்சாறுபடி 1/8
நொச்சி இலைச்சாறுபடி 1/8
பிரண்டை வாட்டிய சாறுபடி 1/8

நெய்யில் கலந்து பதமாய்க் காய்ச்சி, இறக்கி ½ பலஞ் சீனியுங் சங்கம் வேர்ப்பட்டை பொடியுந் தூதுவளை வேர்ப்பட்டைப் பொடியு முக்கால் பலங்கூட்டி நாளொன்றுக்கு உள்ளங்கை கொண்ட நெய்யுள்ளுக்குக் கொள்ளவும். உப்புக் கூட்டவும். மறுபத்தியம் பிடிக்கவும். தீரும் வியாதி.

சுவாசகாசம், ஈளைஇருமல் எந்த வியாதியிலெடுத்த இளைப்புந் தீரும்.

### 64. காச சுவாசமுன்பட்டதுக்கு தசமூல நெய்சுரசம்

| | |
|---|---|
| பெருவாகை | பலம் 4 |
| பெருங்குமிழ் | பலம் 4 |
| முன்னைபாதிரி | பலம் 4 |
| வில்வங் கண்டங்கத்திரி | பலம் 4 |
| சுருவழுதலை | பலம் 4 |
| நெருஞ்சில் | பலம் 4 |

சிற்றமல்லி பேர்மல்லி இரண்டு சமூலம், நாலு பலமாக எட்டுப்பலம் இது சேர் பிடித்து நாலு மரக்கால் நார்விட்டு, நாலுபடியாகக் காய்ச்சி, இறுத்து நாழி நெய்விட்டுத் திரிகடுகு, திரிபலை, ஏலம், கோஷ்டம், இந்துப்பு, விளலரிசி, வாலுளுவையரிசி, சவ்வச்சலங்கம், ஓமம் இது ஒன்று கழஞ்சு அரைத்து மூன்று நாள் கொதிவிட்டு நாலாநாள் வடித்து இரண்டு காசிடை கொண்டுவர சுவாசகாசம்,

மார்பிலுழைப்பு, மார்பிலிடிப்பு, நெஞ்சுக்கட்டு, குன்ம், கிறாணி தீரும், இதில் ஆனந்த வயிரவம் ஒரு குண்டு மணியிடை கிருதத்திலிட்டு வர நல்லது.

### 65. காச சுவாசம், பாண்டுகாமாலை உள்பட்ட வியாதிக்கு தாளீச வடகம்

| | |
|---|---|
| தாளீசபத்திரி | 2 பங்கு |
| சுக்கு | 2 பங்கு |
| திப்பிலி | 2 பங்கு |
| செவ்வியம் | 2 பங்கு |
| திரிபலை | 1 பங்கு |
| திப்பிலிமூலம் | 1 பங்கு |
| மிளகு | 1 பங்கு |
| ஏலம் | 1 பங்கு |
| பச்சிலை | 1 பங்கு |
| நாகப்பூ | 1 பங்கு |
| வெல்லம் | 40 பங்கு |

தண்ணீரில் கரைத்து வடித்துக்கொண்டு அடுப்பிலேற்றிப் பாகாகக் காய்ச்சி அதிலே, புளியஞ்சிறாய் சுட்ட சாம்பல் பத்துப் பங்கு போட்டுக் காய்ச்சிக் குளம்பாகிற பக்குவமாகக் கிளறி மூன்று, காசிடையிலே உருண்டை பண்ணிக் காலமே கொள்ள காசம், சுவாசம், பாண்டு, காமாலை மேல்மூச்சு, மருத்தீடு மந்தாக்கினி, வெப்புப்பாவை இவை முதலானவை ஒரு மண்டலங் கொள்ளத் தீரும்.

கையாந்தகரை, தூதுவளை, ஆடாதொடை, சங்கு, சுழலாவாரை இந்த அஞ்சிலைச் சாறும் ஒரொன்று நாழியாகக் கூட்டி நெய் உரி, எண்ணெய் உரி, கடுக்காய் நூறு (100) இடித்துப் பொடியும் பழவெல்லம் 20 பலம் சேர ஒன்றாகக் கூட்டித் திப்பிலி, சிறுதேக்கு, செவ்வியம், கொடிவேலி, அதிவிடயம், சுக்கு, சீரகம், பொன்முசுட்டை வேர், பெருங்காயம், அரேணுகம், பெருங்குரும்பை, வெண்கடுகு, மிலகு, கடுகுரோகணி, குங்கிலியம், சுழலாவாரை, ஓமம், ஏலம், திப்பிலிமூலம் வாய்விளங்கம் ஓரொன்று ஒரு கழஞ்சு

கூட்டிச் சூரணம் பண்ணி அரைப்பொடி பலம்½ இது சேர் இட்டு மந்தாக்கினியிலே குழம்பாகிற பக்குவத்திலே இறக்கி ஒரு நாள் ஆறப்போட்டு 15 நாள் தானிய புடத்தில் வைத்து எடுத்து ஒரு கொட்டைப்பாக்கு மருவாதி ஒரு மண்டலங்கொள்ள ஈளை இருமல், சுவாசகாசம் இவையெல்லாந் தீரும். கைப்புப் புளிப்பு விட்டு, பசுவின் பால், வெள்ளாட்டுப்பால், பசுவின்நெய், துவரம் பருப்பு, முருங்கையிலைப்பிஞ்சு, புடலங்காய், காடை, கவுதாரி, வெள்ளாட்டு பத்தியமிட்டு வரவும்.

### 67. சுவாசத்துக்குக் குடிநீர்

சிறுவழுதலைவேர், ஆடாதொடைஇலை, தேள்கொடுக்கு, சீந்தில்தண்டு, சிறுதேக்கு, சுக்கு, சங்கிலை, பேராம்பிலை, கூட்டி இருநாழி நீர் வார்த்து உழக்காகக் காய்ச்சித் தேனும் திப்பிலியுங் கூட்டிக் கொடுக்கவும். சுவாசகாசம் நிற்கும்.

### 68. சுவாசகாசத்துக்கு

வெள்ளைக் குங்கிலியம் பொடி செய்து சாறுவேளை வேரும், உள்ளியும், வசம்பும், நறுக்கி நல்ல எண்ணெய் பண்ணி இடச்சுவாசகாசம் நிற்கும்.

### 69. காசசுவாசகிருதம்

மிளகரணைவேர், பொரிம்பில் வேர், சங்கம்வேர், கடுநெல்லி, தான்றிமஞ்சள், சாறுவேளைவேர், ஆடாதொடை வேர், நொச்சில் வேர், ஆக 11 மருந்தும் மூன்று பலமாக முப்பத்துமூன்று பலமும், பெருவாகை, பெருங்குமிழ், முன்னை, பாதிரி, கூவளை, சித்தமல்லி, பேர்மல்லி, சிறுவழுதளைவேர், கண்டங்கத்திரி, நெருஞ்சில், இவை ஓரொன்று இரண்டு பலம் ஆகப்பலம் 66 பலமும் மாவிலங்கை வேர், செம்முள்ளிவேர், தண்ணீர் முட்டான் கிழங்கு, கொடிவேலிவேர், விழுதிவேர், களார், ஆயில், புங்கு, தழுதாழைவேர், புன்னை, மூக்கரத்தை வேர், நாணல்,

ஆதண்டை, ஆக இவை 6 பலமும், முந்தினது மிதுவும் கூடபலம் 132. ஆடாதொடை இலை பலம் 32 ஆக எல்லாம் பலமும் இருதூணி நீர் கஷாயமிட்டுப் பதக்காகக் காய்ச்சி வடித்துப் பசுவின் நெய் நானாழி கலந்து திப்பிலி மூலம், செவியம், கொடி வேலி, கெசத்திப்பிலி, வெட்பாலை, அரிசி, கற்கடக சிங்கி, சிறுதேக்கு, புன்னை, ஏலம், கடுகு ரோகணி, சீரகம், கருஞ்சீரகம், அசமதாகம், கடுநெல்லி, தான்றி, கற்பூரம், சிற்றரத்தை, மிளகு, கோஷ்டம், இந்துப்பு, வாலுழுவை அரிசி, முந்திரிகைப் பழம், அதிமதுரம், இலவங்கம், லவங்கப்பத்திரம், இவை இரண்டு காசிடை கூட்டிக் கஷாயமிட்டு அந்த நீர் வார்த்துக் கலந்து நெய்ப்பண்ணி, நக்க வியாதியும் ரத்தபித்தமும் இருமலுஞ் சுவாசகாசமும் இப்படிப்பட்ட வியாதியும் நிற்கும். இப்படி மகா சுவாசகாசகிருதம் பண்ணி இடவும்.

### *70. நிரா அபையாதிலேகியம் சுவாசகாச முதலானதுக்கு*

பாப்பார் முள்ளி வேர் பலம் 100
கடுக்காய் 100

இவை இரண்டும் இடித்து இருதூணி நீர் வார்த்துக் குருணியாகக் காய்ச்சி இதில் பழ வெல்லம் பலம் - 100 கரைந்து லேகியமாகக் காய்ச்சிக் கடுக்காய், தான்றிக்காய், நெல்லிப்பருப்பு, சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலம், இலவங்கம், இலவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ இவைகள் வகையொன்றுக்கு பலம் - 1, சூரணம் பண்ணி லேகியத்திற் கலந்து தேன்படி - 1. கலக்கவும், இரண்டு நேரமுங் கொள்ளவும். சுவாசகாசம், உப்புசம், க்ஷயம், இருமல் இவை தீரும்.

### *71. சுவாசகாச சேத்துமத்துக்கு தேட்கடை நெய்*

தேட்கடை 64 பலம் தரித்திடித்துத் தூணித் தண்ணீர் நானாழியாக்கி வடித்துச் சுக்கு, திப்பிலி, மிளகு, வசம்பு, கற்கடகசிங்கி, அத்தித்திப்பிலி, இந்துப்பு, இவர்க்காரம், சிருமூலகம், கடுகு ரோகணி, கோட்டம், செங்கொடுவேலி, வேர்ப்புரந் தோல், பங்கம் பாளைவேர், கண்டங்கத்திரி

வேரிற்புரந் தோல், ஆயிர்பட்டைச் சாரடைவேர், இவை ஓரொன்று இருகழஞ்சு கொண்டு அரைத்துக் கரைத்து வெள்ளாட்டு நெய் 2½ யும் கலந்து வடித்து இது ஆறினால் பதின்பலம் தேன்கலந்து நக்க இதுக்குக் கஷாயம் தேட்டை எண்கழஞ்சு - சுக்குநாற்கழஞ்சு - 4 நீர் வார்த்துக் காய்ச்சிக் குடிக்கவும் சுவாசகாசம் சேத்துமந் தீரும்.

### 72. வேறு

ஈளை யோகத்துக்கும் மச்ச யோகத்துக்கும் நீழலோகத்துக்கும், அரளோகத்துக்கும், சக்தி, யோகத்துக்கும் அத உடம்பு மலர்ந்தாப் போலே தடித்துக்கொண்டாப்போலே இருக்கும். எப்பொழுதும் அசீர்ணம், உலாந்தி, உப்பிசம், இருமல், காய்ச்சல், தலைநோவு, பீனிசம், விடாய் இந்தக் கணத்துடனே கூட்டி இருக்கும் இது சுவாசகாச லட்சணம்.

### 73. காசசுவாசத்துக்கு

சிறுதேக்கு, கற்கடக சிங்கி, சுக்கு, மிளகு, திப்பிலி, சடாமாஞ்சில், திப்பிலிமூலம், அசமதாகம், கொடுவேலி, உள்ளிக்கருநொச்சில், வெண்ணொச்சில், கொன்றைவேர், கண்டங்கத்திரி, முன்னை, பாதிரி, பெரிவாகை, பெருங்குமிழ், சிற்றமல்லி, பேர்மல்லி, வில்வபத்திரி, தூதுவளை, சிறுவழுதளை, நெருஞ்சில், கடுகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, அரத்தை, ஏலம், இலவங்கம், நாகப்பூ, கிராம்பு, செம்பிளிச்சை, மனோசிலை, ஆனைத்திப்பிலி, இந்துப்புத் தாளிசபத்திரி, அகில், பெருங்காயம், முள்ளங்கிக் கிழங்கு, தேத்தான்விரை, பிருவடிப் பூண்டு, மாதளம்பழம், யவட்சாரம், நமட்சாரம், சாதிக்காய், பச்சிலைச்சாரம், கையான் தூதுவளை, உத்தாமணி, பொரும்பில், ஆடாதொடையிலை, குப்பைமேனி இலை, மருதோன்றியிலை, முருக்கிலை, செங்கிலை, தேட்கொடுக்கி, கொள்ளுச்சாறு.

### விரை வரை

அழிஞ்சில்விரை, தேன், பால், சர்க்கரை இவை எல்லாஞ் சுவாச காசத்திலே பிரசித்தமான அவிழ்தம்.

### 74. காசம் சுவாசத்துக்குப் பூசணிநெய், விக்கல், காச ரோகத்துக்கும்

இரண்டு பூசணிக்காய்ச்சாறு குறுணியும், விட்டு இதில் கரிப்பாலை வேர், அதிமதுரம், ஏலம் இலவங்கம், பச்சிலை, நாகப்பூ, இலாமிச்சம் வேர், விழலரிசி, சுக்கு, இந்துப்புத் தேவதாரம், அசமோதகம், சிறுதேக்கு, கோட்டம், அமுக்குராவேர், ஓரொன்று முக்கழஞ்சு, பூசணிக்காய்ச்சாறு, வார்த்தரைத்து வைத்தவுடன் நாலுநாள் ஆறி, அஞ்சாணாள் வடித்துக் கொள்ளவும். இதுக்கு நாப்பலங்கண்டு, சர்க்கரை கூட்டிக் கொள்ளவும். பழகின கலசத்தில் கட்டி வைத்து, நாளொன்றுக்கு முக்கழஞ்சு திண்ண காயாசுவாசம், சயரோகம், விக்கல், காரங்கரை, உள்வேட்கை மாறும்.

### 75. காசசுவாசம், இளைப்பு, இறைப்பு, பீனிசம் இவற்றிற்கு லேகியம்

தூதுவளை வேர்ப்பட்டை காயப்போட்டுத்தூள் ஒரு சிறங்கை மஞ்சள்தூள், காலே அரைக்கால் சிறங்கை, கடுக்காய்த்தூள், காலே அரைக்கால் சிறங்கை மிளகுதூள் காலே அரைக்கால் சிறங்கை நெய், ஒரு மாகாணி கொதிக்க வைத்து அதிலே போட்டுக் கிண்டி வைத்துக்கொண்டு அந்தி, சந்தி தினசரி கொண்டு வரச்சீராம். கை கண்டது.

### 76. காசசுவாசங்களுக்குத் திப்பிலியாதி ரசாயனம்

| | |
|---|---|
| திப்பிலி | பலம் 4 |
| ஏலம் | பலம் 1 |
| இலவங்கப்பட்டை | பலம் 1 |
| இலவங்கப்பத்திரி | பலம் 1 |
| கிராம்பு | பலம் 1 |
| சுக்கு | பலம் ½ |
| ஓமம் | பலம் ½ |
| செவ்வியம் | பலம் ½ |
| திப்பிலிமூலம் | பலம் ½ |
| சீரகம் | பலம் ½ |

| | |
|---|---|
| தக்கோலம் | பலம்½ |
| கொத்தமல்லி | பலம்½ |
| சதகுப்பை | பலம்½ |
| வாய்விளங்கம் | பலம்½ |
| கொடிவேலி | பலம்½ |
| சிறுதேக்கு | பலம்½ |
| தாளிசபத்திரி | பலம்½ |
| சர்க்கரை | பலம் 2 |
| கையாந்தகரைப்பொடி | பலம் 2 |

இவை எல்லாஞ் சூரணம்பண்ணித் தேன்படி 1½ இதிற்போட்டு லோகம் பலம்½ கூடச் சேர்த்துச் சாப்பிட்டால் சுவாசகாசங்கள் பாண்டு, அக்கினி மாந்தம், பலகீனம் முதலான ரோகங்கள் தீரும்.

### 77. வேறு

| | |
|---|---|
| திப்பிலி | பலம் 8 |
| வாய்விளங்கம் | பலம் 4 |
| சுக்கு பலம் | பலம் 4 |
| சிறுதேக்கு பலம் | பலம் 4 |
| சீரகம் | பலம் 4 |
| மிளகு | பலம் 4 |
| திப்பிலி மூலம் | பலம் 2 |
| செவ்வியம் | பலம் 2 |
| கொடிவேலி | பலம் 2 |
| கையாந்தகரை தூள் | பலம் 2 |

இவை இடித்துத் தூள் பண்ணி, சர்க்கரை 1½ சேர், தேன் சேர் ½ கூடச் சேர்த்துப் பிசைந்து 15 நாள் தானிய புடத்திலே வைத்துச் சாப்பிடச் சயங்கள், சுவாச காசம், குன்மம், அரோசிகம் இவை முதலானவை தீரும்.

### 78. சுவாச காசத்துக்கு குண்டலியாதி லேகியம்

| | |
|---|---|
| சங்கம் வேர் | பலம் 150 |
| கண்டங்கத்திரி | பலம் 75 |
| செவ்வியம் | பலம் 75 |

வில்வவேர், நிலக்குமுளம் வேர், தக்காளிவேர், பாதிரிவேர், காட்டாமணக்கு வேர், பேராமல்லி வேர், சடாமாஞ்சில், சிறுதேக்கு, திப்பிலிமூலம், கொடிவேலி இவை வகைக்கு பலம் 20 இவை எல்லாமறுவதுபடி தண்ணீர்விட்டு எட்டிலொரு பங்காய்க் காய்ச்சி வடிகட்டிக்கொண்டு, வெல்லம் பலம் 104 கூடப்போட்டுப் பாகாய்க் காய்ச்சிக் கொண்டு,

| | |
|---|---|
| சுக்கு | பலம் 8 |
| கடுக்காய் | பலம் 3 |
| தான்றிக்காய் | பலம் 3 |
| நெல்லிக்காய் | பலம் 3 |
| ஓமம் | பலம் 4 |
| மூங்கிலுப்பு | பலம் 4 |
| மிளகு | பலம் 4 |
| ஏலம் | பலம் 3 |
| கரும்பு | பலம் 3 |
| இலவங்கப்பத்திரி | பலம் 3 |
| சிறுநாகப்பூ | பலம் 3 |
| திப்பிலி | பலம் 20 |
| கடுக்காய்ப்பூ | பலம் 2 |
| சிறுதேக்கு | பலம் 2 |
| தேன்படி | பலம் 1 |

கூடவிட்டு இலேகியஞ் செய்து சாப்பிடவும், தீரும் வியாதிகள், சுவாசகாசம், பீனிசம், விக்கல், மார்பு வலி, சூலை, அக்கினிமாந்தியம், குன்மம், மூலம், வயிற்றுக்கட்டி, மகோதரம், கிராணி, வீக்கமிவை முதலானவெல்லாம் தீரும்.

### *79. வேறு*

| | |
|---|---|
| சங்கம்வேர் | பலம் 150 |
| கண்டங்கத்திரி சமூலம் | பலம் 75 |
| செவ்வியம் | பலம் 75 |
| கீழ்க்காய்நெல்லி | பலம் 75 |
| தசமூலம் வகைக்கு | பலம் 7 |

வெள்ளைச் சாறனை, மூக்கரட்டை, கொடிவேலி, திப்பிலிமூலம், சிறுதேக்கு இவை வகைக்கு பலம் 20, இவை எல்லாம் இடித்து 64 படி சலம் விட்டு 8 படியாய்க் காய்ச்சிக்கொண்டு வெல்லம் பலம் 150 கூடப்போட்டுப் பாகு காய்ச்சி அதிலே சுக்கு பலம் 8, தாளீச பத்திரி, இலவங்கப் பட்டை, சிறுநாகப்பூ, மூங்கிலுப்பு, மிளகு, லோகம் இவை வகைக்குப் பலம் 4. ஓமம், சீரகம், பெருங்காயம் இவை வகைக்கு பலம் 2. திப்பிலி பலம் 23, சிறுதேக்கு பலம் 1 கர்கடகசிங்கி பலம் 1 இவை எல்லாஞ் சூரணம் பண்ணி முன் பாகிலே கலந்து ஒரு சேர் தேன் விட்டு ஒரு நெய்ப்பானைக்கு முன் வெட்பாலை அரிசித்தூள் செய்து தேனிலே கலந்து அந்தப் பானைக்கித் தடவி இந்த லேகியத்தை இதுக்குள்ளே போட்டுத் தானிய புடத்தில் 15 நாள் வைத்துத் தான்றிக்காய் பிரமாண லேகியஞ் சாப்பிடத் தீரும் வியாதி சுவாசகாசம், சயம், வயிற்றுக்கட்டி, குன்மம், அரோசிகம், பீனிசம், மூலம், கிராணி முதலானவை தீரும்.

### *80. சுவாச ரோகத்துக்கு விளங்காதிச் சூரணம்*

வாய்விளங்கம், திப்பிலி, பெருங்காயம், சத்திச்சாரம், இந்துப்பு, சுக்கு, சிற்றரத்தை இவை சமபாகஞ் சூரணஞ் செய்து, நெய்யிலே கலந்து சாப்பிடச் சுவாசம் தீரும்.

### *81. பஞ்சகோலாதிச் சூரணம் சுவாச காசத்துக்கு*

பஞ்சகோலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, ஏலம், சிறுநாகப்பூ, கிராம்பு, சீரகம், ஓமம், சாதிக்காய், சாதிப்பத்திரி, மிளகு, தேவதாரம், சிற்றரத்தை, கோஷ்டம், வாய்விளங்கம், சிறுதேக்கு, தாளிசபத்திரி, மரமஞ்சள், அசுவகெந்தி, கொடிவேலி இவை சமபாகம். இதுக்குச் சமம் தேவதாருச் சூரணம் இவையெல்லாஞ் சேர்த்துச் சாப்பிட மறகடிரோகம், குன்மம், விஷசுரம், க்ஷயரோகம், பாண்டுரோகம், சுவாசகாசம், வாதம் 80, குஷ்டம் 18, காமாலை, நேத்திரதிமிரம், அக்கினிமாந்தியம், நீரடைப்பு, பீனிசம், உதரவர்க்கம், மூலரோகம்இவை தீரும்.

### 82. சுவாச காசமுதலானதுக்குப் பூரண சந்திரோதயம்

பொன்பற்பம் விராகன் 5, இரதம் விராகன் 40. கெந்தகம் விராகனிடை 30, அரிதாரம் விராகன் 10 இவைகள் கூட்டிச் சிவந்த பருத்திப்பூச்சாறு, கத்தாழஞ் சாறு, வார்த்தரைத்துச் சிறுக வில்லைப் பிடித்து உணர்த்திக் கட்டிச் சீலை மண் செய்து வளையல் குப்பியிலிட்டுப் பின்னையுஞ் சீலைமண் செய்து குண்டு சட்டிக்கு மேலே குப்பிவாய்ப்பிடிக்கத் தக்கதாக இல்லிவிட்டு தலைகீழாக இல்லியில் வைத்து அதிக மணல் சொரிந்து அடுப்பிலேயிட்டு நாலு சாமம் மூன்று விறகால் தீபாக்கினியாக எரிக்கவும். பின்னையும் நாலு சாமம் காலாக்கினியாக எரிக்கவும். இப்படிப் பனிரெண்டு சாமம் எரித்துப் பூசையிட்டு வாங்கிக் குப்பி உடைத்துச் செந்தூரம் எடுத்து இதுக்கு அனுபானம், பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, சாதிக்காய், மிளகிவை ஓரொன்று ஒரு பணவிடையுஞ் செந்தூரம் அரைக்கால் பணவிடையுங் கூட்டிப் பொடி செய்து வெற்றிலையில் காலையில் கொடுக்கவும். மாலையில் தேனில்க் கொள்ளவும். சயகாசம் தீரும். திருகடுகிற்கொள்ளச் சுவாச காசசயம், உப்பிசமீளை, இளைப்பு, மிக்க புகைச்சல், சன்னி பதிமூன்றும், வாதம் 84-ம் சகல வியாதியும் தீரும். இது கை கண்டது.

### 83. சுவாசகாசத்திற்கு தாளீச மாத்திரை

| | |
|---|---|
| தாளீசபத்திரி | பலம் 1 |
| மிளகு | பலம் 1 |
| சுக்கு | பலம் 3 |
| செவ்வியம் | பலம் 1 |
| திப்பிலிமூலம் | பலம் 2 |
| திப்பிலி | பலம் 2 |
| இலவங்கப்பட்டை | பலம் ¼ |
| ஏலம் | பலம் ¼ |
| இலவங்கப்பத்திரி | பலம் ¼ |
| சிருநாகப்பூ | பலம் ¼ |
| இலாமிச்சம் வேர் | பலம் ¼ |

இவை எல்லாமிடித்துத் தூள் பண்ணிச் சூரணத்துக்கு இரட்டிப்பு வெல்லம் போட்டு உருண்டைகள் செய்து சுழற்கொடிக்காய்ப் பிரமாணம் நித்தியம் ஒவ்வொரு உருண்டை சாப்பிடவும். சுவாச காசம் வாத கபத்தினாலே உண்டான ரோகங்கள், கிராணிகள், வாந்தி, சுவாச காசம், சுரம், அரோசிகம், வீக்கம், குன்மம், மகோதரம், பாண்டு, ரோகமிவைகள் தீரும்.

### 84. வேறு (குக்குலாதி மாத்திரை)

| | |
|---|---|
| சுக்கு | பலம் ½ |
| திப்பிலி | பலம் ½ |
| மிளகு | பலம் ½ |
| கடுக்காய் | பலம் ½ |
| நெல்லிக்காய் | பலம் ½ |
| தான்றிக்காய் | பலம் ½ |
| கோரைக்கிழங்கு | பலம் ½ |
| வாய்விளங்கம் | பலம் ½ |
| செவ்வியம் | பலம் ½ |
| கொடிவேலிவேர் | பலம் ½ |
| இலவங்கப்பட்டை | பலம் ½ |
| சவ்வர்ச்சலவணம் | பலம் ½ |
| சரசலவணம் | பலம் ½ |
| இந்துப்பு | பலம் ½ |
| யானைத்திப்பிலி | பலம் ½ |
| சுத்தி பண்ணின குக்குலு | பலம் 12 |
| ஏலம் | பலம் ½ |
| திப்பிலிமூலம் | பலம் ½ |
| கடுகுரோகணி | பலம் ½ |
| தேவதாரம் | பலம் ½ |
| வசம்பு | பலம் ½ |
| வெட்பாலையரிசி | பலம் ½ |
| புஷ்கரமூலம் | பலம் ½ |
| மரமஞ்சள் | பலம் ½ |

| | |
|---|---|
| மஞ்சள் | பலம் ½ |
| பிடலவணம் | பலம் ½ |
| மூக்கரட்டை | பலம் ½ |

இவை எல்லாம் இடித்து இலந்தைப் பழம் அளவு பிரமாணம் உருண்டை செய்து அந்த உருண்டையை எல்லாமுலர்த்தி வைத்துக்கொணடு தினந்தோறும் ஒரு உருண்டை தேனிலேயாவது அனுபானஞ் செய்து சாப்பிடவும்.

**தீரும் வியாதிகள் :**

சுவாசகாசம், வீக்கம், மூலரோகம், பசுந்தர ரோகம், குன்ம ரோகம், வயிற்றுக் கட்டிகள், வயிற்றுப்பொருமல், வளிரோகம், கிருமி ரோகம் சய முதலான ரோகங்களும் தீரும்.

### 85. வேறு (சண்முகரசம்-சுவாசத்துக்கு)

| | |
|---|---|
| காரீயபற்பம் | விராகன் 1 |
| வெள்ளீயபற்பம் | விராகன் 1 |
| அப்பிரகபற்பம் | விராகன் 1 |
| தாம்பிரபற்பம் | விராகன் 1 |
| காந்தபற்பம் | விராகன் 1 |
| லோகபற்பம் | விராகன் 1 |
| ரசசிந்தூரம் | விராகன் 1 |

இவை எல்லாம் கல்வத்திலே போட்டுக் கண்டங்கத்திரிச் சாற்றால் அரைத்துக் குன்றிப்பிரமாணம் உருண்டை செய்து வாழைப்பழத்திலாவது, கொம்புத் தேனிலாவது பிண்ணுங்களிலேயாவது, கொடுக்கச் சுவாசகாசம், மார்புவலி, பீனிசம் இவை முதலான வெல்லாந் தீரும்.

### 86. சுவாசகாசத்துக்கு

கீழாநெல்லி, கடுக்காய், சிறுதேக்கு, செவ்வியம், திப்பிலி, சுக்கு, தூதுவளைவேர், ஆடாதொடைவேர், முள்ளிவேர், கண்டங்கத்திரிவேர், சீந்தித் தண்டு இலையும் மிளகு இவை நாழி நீர்விட்டு உழக்காய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

### 87. காசத்துக்கு

கடுக்காய் விரைப்பருப்பு, விராகனிடை, திப்பிலி மூன்று பணவிடை நெல்லிக்காய்ச்சாறு விட்டரைத்து உருண்டை செய்து எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்துக் கண்ணுக்கிடக் காசமுந் தீரும்.

### 88. பூஷணி நெய் காசமுதலான ரோகத்துக்கு

| | |
|---|---|
| பூஷணிநீர் குறுணி | நெய் 4 |
| காரோணிதம் | பலம் 4 |
| புண்டரீகம் | பலம் 4 |
| முத்தக்காசு | பலம் 4 |
| சிறு தேக்கு | பலம் 4 |
| திப்பிலி | பலம் 4 |
| பூலா அரிசி | பலம் 4 |
| பற்பாடகம் | பலம் 4 |
| அரத்தை | பலம் 4 |
| சுக்கு | பலம் 4 |
| வசம்பு | பலம் 4 |
| திப்பிலிமூலம் | பலம் 4 |
| கொடிவேலிவேர் | பலம் 4 |
| அத்தித்திப்பிலி | பலம் 4 |

இவை ஒரொன்றுக்கு நாலு பலங்கொண்டு அரைத்துக் கரைத்துப்பால் - 4. புகட்டி வடித்து நக்கவும். காசம், சயரோகம், சுரம், பித்தகுன்மம் இவை தீரும்.

### 89. காசரோகத்துக்குப் பாவநாச அரிதாரக் கடுக்காய்

மாலையன் கடுக்காய் 100 புளித்த காடியிலே ஊறப்போட்டு மூன்று நாள் வெயிலில் உலர்த்தி வைத்துக்கொண்டு இப்படி மூன்று பிரகாரம் 10 நாள் ஊறப்போட்டுக் கொட்டையை நீக்கிப்போட்டு உலர்த்தி நிறுத்திக்கொண்டு கடுக்காய்க்கு நாலிலொன்று கல்லுப்புக் கூட்டப் பசுவின் மோர், புளித்த மோர்க்குழம்பு, மோர் வார்த்துச் சிறுக எரியிட்டு, மோர் சுவறினவுடனே,

எடுத்துலர்த்தித் திப்பிலி, கண்டந் திப்பிலி, திப்பிலி மூலம், கொடிவேலி வேர், செவ்வியம் வகைக்குப் பலம் ½, மிளகு, இந்துப்பு, ஓமம், சுக்கு இவை வகைக்குப் பலம் 1 இவையெல்லாம் நன்றாய்த் தூள் பண்ணி வடிகட்டிக்கொண்டு கடுக்காய்த் தூவி எலுமிச்சம் பழச்சாறு விட்டு மந்திக்கச் சண்டமாருதலேகியமாகும். தான்றிக்காய்போல் உருண்டை செய்து கொடுக்கவும்.

**பத்தியம் :**

கைப்பு,புளி, புகையிலை நீக்கிப் பத்தியத்துக்கு கூட்டுகிறது. கறிஉப்பு வறுத்துக்கூட்டவும். வாழைக்கச்சல், முருங்கைப்பிஞ்சு, பத்தியம். அவரைக்காய், வழுதலை, கத்தரிக்காய், நெய், பால், துவரம் பருப்பு, தூதுவிளங்கீரை, முளைத்தண்டு இவையெல்லாங்கூட்டிக்கொள்ளவும். காசநோய் தீரும். நாற்பது நாள் கொள்ளவும்.

### *90. சண்டமாருத லேகியம்-காசரோகத்துக்கு*

| | |
|---|---|
| கண்டங்கத்திரிச் சாறு | படி ¼ |
| தூதுவளைச்சாறு | படி ¼ |
| மஞ்சனாத்திச்சாறு | படி ¼ |
| மிளகு தக்காளிச்சாறு | படி ¼ |
| சங்கிலைச்சாறு | படி ¼ |
| ஆடாதொடைச்சாறு | படி ¼ |
| துளசிச்சாறு | படி ¼ |

ஆக இவ்வளவு சாற்றையும் சேர்த்தரைப் படியாக வற்றக் காய்ச்சிக் கருப்புக் கட்டி பலம் 5 பொடி செய்து போட்டுக் கிண்டிக் கால்படியாய் நிற்கையில், நிதானங்கண்டு கடை மருந்து கடுக்காய், திப்பிலி, சிற்றரத்தை வகைக்கு விராகன் 15 வெய்யிலிற் காயவைத்துக் காயவைத்து இடித்து நேர்த்தியாய் வடிகொண்டு முன்பாகில் பொடியைத் தூவி அடிப்பற்றாமல் அடிக்கடி கிண்டி அரைக்காற்படி தேன்கிண்டவிட்டு பசுவின் நெய் மாகாணிப்படி விட்டு மத்திக்கச் சண்டமாருத லேகியமாம். தான்றிக்காய் போல் உருண்டை செய்து கொடுக்கவும்.

**பத்தியம்:**

கைப்பு, புளிப்பு, புகைநீக்கி பத்தியத்திற்குக் கூட்டுகிறது. கரி, உப்பு, கூட்டுகிறது. வாழைக்கச்சல், முருங்கைப்பிஞ்சு, நெய், பால், துவரம்பருப்பு, தூதுவிளங்கீரை, முளைத்தண்டு, இவையெல்லாம் கூட்டிக் கொள்ளவும். காசநோய் தீரும். நாற்பதுநாள் கொள்ளவும்.

### *91. இரத்தக்காசத்துக்கு*

பனம்பதினி அதிகாலையில் ஒரு மண்டலம் நாற்பது நாள் கொள்ளத்தீரும்.

### வேறு

இலவம்பட்டையில் குறுவை அரிசி போட்டு இடித்துக் களி கிண்டி பசுவின் நெய் விட்டுக்கொண்டு களித்தின்னவும். கைப்புப்புளி தவிரவும்.

**பத்தியம் :**

நெல்லுச்சோறு கூட்டவும்.

### *92. வாயினாலேயே இரத்தம் விழுந்தால்*

கொட்டைப்பாசி இலை துவைத்து, சாறுகொண்டு அதில் நாழி அவல் பிசிறி முப்பது நாழிகை ஊற வைத்து நிழலுலர்த்தித் தினம் ஆழாக்கு அவல் தின்னவும். பத்தியம் பிடிக்கவும்.

மருதங்கொழுந்து சட்டியிலே போட்டுத் தண்ணீரிலூறப்போட்டுப் பிசைந்து வடித்துக் கொடுக்கவும்.

### *93. பக்ககாசத்துக்கு*

முந்நாழி நெல்லுக்கு முந்நாழி தண்ணீர் வார்த்து வறட்பூலாவேர் வடக்குப்போகின்றவேர் வாங்கி குளிசமாகப் பண்ணி சங்கம்வேர், சற்றுக்கல்லுப்பு ஒரு பிடி ஒக்க நெல்லிற்கூட்டி வேக வைத்துத் தண்ணீர் சுவறுகிற மட்டிலே இறக்கி நெல்லைக் குற்ற அரிசியாம். இதன் உமி சவன் சூளையிற் போடக் குசக்கலமுடையும். கொல்லன்

உலையிற் போட இரும்பு சிதறி வேகாது. இதன் தவிடு செங்காடுகையிற் போட எண்ணெய் காணாது. அரிசியைப் பாலிற் பொங்கிச் சாப்பிடவும்.

## 94. வேறு

தூதுவிளை வேர், இன்பூறல்வேர், அமுக்கராவேர், கண்டங்கத்திரி வேர், பெருமருந்து, சீந்திற்கிழங்கு இவை நறுக்கிக் கஷாயம் வைத்துக் குடிக்கவும்.

## 95. பயித்திய காசத்துக்கு எண்ணெய்

| | |
|---|---|
| ஏலம் | 5 |
| இலவங்கப்பட்டை | 2 |
| திப்பிலி | 56 |
| சாதிக்காய் | 14 |
| சாதிப்பத்திரி | 53 |
| சீரகம் | 2 |
| சீதேவிசெங்களின் | 5 |
| எலுமிச்சம்பழச்சாறு | ¾ நாழி |
| கையாந்தகரைச்சாறு | ¾ நாழி |
| நரிப்பயத்தஞ்சாறு | ¾ நாழி |

இவை எல்லாங் கூட்டி இடித்துப் பதக்கு நிழநீர் வார்த்து, குறுணி நல்லெண்ணையில் எரித்து வடித்து வைத்துக்கொண்டு எட்டு நாளைக்கொருதரம் தலைக்குத் தேய்த்து சிறுபயறிட்டு முழுகிறது. பயித்திய காசந்தீரும்.

## 96. மந்தாரகாசத்துக்கு எலிகடிக்கு, இறைப்புக்கு மருந்து

ஆடு தீண்டாப்பாளை கொண்டு வந்து ஒரு எலுமிச்சங்காயளவு அரைத்து வெள்ளாட்டுப் பாலிற் குழப்பி 3 நாட்கள் காலையில் கொள்ளவும்.

**இதுக்குப் பத்தியம் :**

உப்பு, புளி ஆகாது. மருந்து வாந்தியானால் பசுவின் பால் கொடுக்கத்தீரும். மறுபத்தியம் பிடிக்கவும். கை கண்டது.

### 97. அரிதார பற்பம், மந்தாரகாசம் முதலானதுக்கு

அரிதாரம் வேண்டினது கொண்டு வந்து, தலையோடு கொண்டு வந்து பொடி செய்து சுண்ணாம்பு நீர் விட்டரைத்துக் குகை செய்து குகைக்குள்ளே அரிதாரங்கட்டியாய் வைத்து மேல் குகைமூடி சீலைமண் செய்து குக்குடபுடமிடவும், பற்பமாமிதுக்குத் தீரும் வியாதி அனுபானம் தேனிலிடவும். மந்தார காசஞ்சயம், ஈளை, இருமல், உளமாந்தை, வண்டுகடி, குட்டம், எலிகடி எல்லாந்தீரும்.

### 98. சுரகாசத்துக்கும், வியாதிக்கும் திப்பிலி நெய்

திப்பிலி, நன்னாரிவேர், நிலவேம்பு, அதிவிடையம், வெட்பாலை அரிசி, நெல்லிக்கா, சீரகம், சுக்கு, கீழாநெல்லி வேர், கடுகுரோகிணி, கூவளைவேர், சந்தணமிலாமிச்சம் வேர், பேர்மல்லி கைவேர், முந்திரிகைப்பழம் இவை ஓரொன்று ஆறுகழஞ்சு அரைத்து நெய்யிருநாழி, பால் இருநாழி கூட்டிக் கொள்ளச் சுவாசம் வியாதியுந் தீரும். கை கண்டது.

### 99. பித்தகாசத்துக்கு வில்வாதி லேகியம்

வில்வவேர் பலம் 40. மேல்தோல் போக்கிப் போட்டுச் சிறுக நறுக்கி இடித்துப் பெரிய மிடாவிலே எட்டு மரக்கால் தண்ணீர் விட்டு மூன்று நாள் ஊறிக்காயவிட்டுக் குறுணியானால் இறுத்துக்கொண்டு இதுமேல் மருந்து ஏலம், நெல்லிக்காய், கிறாம்பு, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, திப்பிலி, கொத்தமல்லி, வெட்டி வேர், இலாமிச்சம்வேர், அதிமதுரம், பேரீச்சம்பழம், கோரைக்கிழங்கு, நெல்லிப்பருப்பு, நன்னாரிவேர், சீந்திற் சர்க்கரை இவை வகை 1க்கு களஞ்சு கூட்டி இடித்துத் தூளாக்கிக் கஷாயத்தில் போட்டு வெல்லப்பாகு போலக் குறுகக் காய்ச்சிக் களஞ்சு சர்க்கரையும் உழக்குப் பசுவின் நெய்யுங் கூட விட்டுக் காய்ச்சிப் பாகுபதத்திலிறக்கி வைத்துக்கொண்டு காலையில் ஒரு கொட்டைப்பாக்களவு பசுவின் பாலிலே கலக்கிக் கொடுக்கவும். இதற்குத் தீரும் வியாதி 40-வகை பித்தகாசம், உண்ட சோறு செரியாமை, காய்ச்சல் மேலிளைப்பு, உள்மாந்தை, பாண்டு, காமாலை இவை சகலமுந்தீரும்.

**இதுக்குப் பத்தியம் :**

கைப்பு, புளிப்பு விட்டுவிடவும், பால், நெய், உப்புக் கண்டம், சிறுபயறு கூட்டிக்கொள்ளவும். கைகண்டது.

### 100. இரைப்புக் கஷாயம்

கண்டங்கத்திரி வேர், பேய்ப்புடல், முசுமுசுக்கை, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், சுக்கு இவை கஷாயஞ் செய்து கொடுத்தால் இரைப்புத் தீரும்.

### 101. இரைப்புக்கு

இரைப்புண்டாய் நெஞ்சடைத்து திட்டு முண்டானால் பல கரை அரைத்து வெந்நீரில் கொள்ளவும்..

### 102. லவங்காதிச் சூரணம் - இருமலுக்கு

இலவங்கம், தக்கோலம், தூதுவளை, கண்டங்கத்திரி, ஏலம், சாதிக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு, சன்ன லவங்கப்பட்டை இவை சமன் சேர்த்து இடித்துச் சூரணம் செய்து தேன், சர்க்கரை, இளநீரில் தண்ணீர் இந்த அனுபானத்தில் கொடுக்க இருமல் வயிற்றுப் பொருமல் வாந்தி இவை தீரும்.

### 103. நாகபற்பம் - இருமல் முதலானதுக்கு

நாகம் ஒருபலம், நல்லெண்ணெய், கோமூத்திரம், எருக்கம் பாலிலே உருக்கிச் சுத்தி பண்ணவும், அதைப் புதுச் சட்டியில் போட்டு உருக்குகிறபோது புளியம்பிறாணி போட்டு வறுத்து ஆடாதொடை கோலிலே மத்திச்சு பற்பமானதுக்கும் பிறகு பஞ்சாமுர்தங் கூட்டிப் பிசைந்து உலைமூடியில் தப்பி மூடிச் சீலைமண் செய்து இதுபுடமிட பற்பமாய் இருக்கும். உளுந்தளவு சர்க்கரையில் கொள்ள இருமல், குடல்வாதம், குட்டம், மந்தாக்கினி, வாதஞ்சிலேட்டுமம், பாண்டு ரோகம், பிரமியம், நீரிழிவு, சகலவியாதியுந் தீரும்.

### 104. இருமலுக்கு மருந்து

தூதுவளை, கரிசாரன்கன்னி, பொடுதலை, துளசி, செருப்படி, கண்டங்கத்திரி, பேர்மட்டி, பெரும்பூலா,

ஆடாதொடை, சங்கு, நொச்சில், செம்முள்ளி, துவைத்துப் பிட்டுச் சாறு பிழிந்து மிளகு வெள்ளுள்ளியும் அரைத்து தாளிச்சு சுக்கும் திப்பிலியும் பொடி செய்து மேல் பொடிதூவிக் குடிக்கச் சுவாசகாசம் நிற்கும். கைப்பும், புளிப்புத் தவிரவும்.

### 105. இருமலுக்கு குடிநீர்

ஆடாதொடையிலை ஒருபிடி, நாழி தண்ணீர் வார்த்துச் சுக்கு, மிளகு, திப்பிலி, தானிக்காய், கடுக்காய் இவை அஞ்சும் முடித்து போட்டுக் காய்ச்சித் தேனுங்காசிடை கூட்டிக் காய்ச்சிக் காலமே உழக்கு கஷாயத்திலே முடிந்த மருந்து அரைத்து நாலு நாள் கொள்ள இருமல் தீரும்.

### 106. இருமலுக்கு

முசுமுசுக்கை இலை சமூலமுங்கொண்டு வந்து குறுக வரித்து முக்குறுணி நீர்விட்டு ஆறுநாழியாய்க் காய்ச்சி 3 நாளைக்குத் தினம் 2 விராகன் அரைப்பலஞ் சர்க்கரையுங் கூட்டிக் கொள்ளவும்.

### 107. இன்னமொன்று

சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், தான்றிக்காய், நெல்லி, முள்ளி இந்த 6-ம் சமன் சூரணம் செய்து வெருகடிப் பிரமாணம் தேனில் குழப்பிக் கொள்ளவும்.

### 108. இன்னமொன்று

| | |
|---|---|
| கண்டங்கத்திரி வேர் | 1 |
| சுக்கு | 2 |
| மிளகு | 3 |
| திப்பிலி | 4 |
| சீரகம் | 5 |

இவை எல்லாம் பொன்னிறமாக வறுத்துப் பொடி செய்து காலமே ஒரு வெருகடிப் பிரமாணம் பசுவின் நெய்யிற் கொள்ளவும். (அதிலே நெய்யோட கூட்டிக் கொள்ளவும்.)

### 109. இன்னமொன்று

இரண்டு சுக்கு நறுக்கி ஒருபடி தண்ணீர் போட்டு உழக்காய்க் காய்ச்சி அதில் நாலு திப்பிலி சுட்டுப் பொடி செய்து போட்டுச் சின்னக்கரண்டியில் பசுவின் நெய் விட்டுக் காசிடை தேனும் விட்டு மூன்றுநாளிரண்டு நேரமுங் கொள்ளவும்.

### 110. இருமலுக்கு

மெல்லிய சீலையைக் குறட்டைப் பழச் சாற்றிலூறவைத்துப் பிறகு பிரான பாலில் நனைத்து அதில் பிறகு வெள்ளெருக்கம் பாலில் நனைத்து நிழலுணர்த்திப் பிறகு குப்பைமேனிச் சாற்றில் கொஞ்சம் அரிதாரம் அரைத்துக் கரைத்து அதிலேயுந் தோய்த்து உலர்த்திச் சிறுகச் சிறுகத் திரிபண்ணி எருக்கங்குழலிலடைத்து மோருஞ் சோறுமுண்டு பிறகு புகை குடிக்கவும். வெந்நீரும் சோறும் பத்தியம் பிடிக்கவும்.

### 111. இன்னமொன்று (இருமலுக்கு)

மிளகு, திப்பிலி, சீரகம், ஏலம், கிராம்பு ஒவ்வொன்றும் இரண்டு விராகனிடை, கண்டங்கத்திரிபலம் 1, தூதுவிளம் பழம் 1 இவை எல்லாம் பசுவின் நெய்விட்டுப் பொன்னிறமாக வறுத்துப் பொடி செய்து கண்ட பொடியிலே சீனியாகிலும் ராயபுரி சர்க்கரையாகிலும் கலந்து தேன்விட்டு, நெய்விட்டுக் கலந்து வைத்துக் கொண்டு மூன்று நாளாறு பொழுது இரண்டு விராகனிடையாகக் கொள்ளவும். உப்புப் புளிப்புத் தவிரவும்.

### 112. இருமலுக்கு மருந்து

ஆடாதொடைச் சாறுபடி ¼

காய்ச்சி, காய்ச்சும் பொழுது ஒரு பலந்திப்பிலி போட்டுக் கிண்டிக் காய்ச்சி ஒரு வராகன் எடை கூடப்பொடி செய்து அந்தக் காய்ச்சிவரும் மருந்தில் சேர்த்துத் தேன் கூடவிட்டு லேகிய பதத்திலே எடுத்துக் கொடுக்கவும். பத்தியம். இச்சா பத்தியம்.

### *113.* இருமலுக்கு கஷாயம்

இன்பூறல் வேர்
சிறுநாகப்பூ
கொத்தமல்லி
கற்கடக சிங்கி
நன்னாரி வேர்
கோரைக்கிழங்கு

இது வகைக்கு பலம் 1. இடித்து 5 பங்கு, ஒரு பங்கு போட்டு ஒரு படி தண்ணீர் விட்டு 1½ படியாகக் காய்ச்சிக் கொடுக்கவும். பத்தியம் - பொரித்த மிளகு சாறுந் தூதுவளை வற்றல் கூட்டிக் கொள்ளவும்.

### *114.* இருமலுக்கு மருந்து

திப்பிலி கொண்டு வந்து, நாழி கொள்ளுகிற பானையில் ¼ படி பால் விட்டு பானைவாய்ச் சீலைகட்டி அந்தச் சீலை மேல் திப்பிலி வைத்துச் சட்டி கொண்டு மூடி 2 நாழிகை எரிக்கவும். திப்பிலி எடுத்து ஆர்க்கப் பொடி செய்து சீனிக்கல்கண்டு பொடி செய்து 1 பலங் கூடக் கலந்து தினசரி ½ காசிடை சாப்பிடவும்.

**பத்தியம் :**

புளி, புகையிலை தவிரவும் 10 நாள் கொள்ளவும். இருமல் தீரும். கை கண்டது.

### *115.* இருமலுக்கு

அரிசி ஒரு சிறங்கை நனையப் போட்டு அரைத்து குகையாகப் பிடித்து, அதில் புட்டிக் கருப்புட்டி ஒரு சிறங்கைத் திப்பிலி,

| | |
|---|---|
| காசிடை | - 1 |
| மிளகு காசிடை | - 1 |
| சுக்கு | - 1 |

பொடி செய்து வெல்லத் தோடே போட்டு மரக்குகையில் வைத்து நெய்க் காய்ச்சி, காய்ச்சும் பொழுது, அது வைத்து,

வேகும் பொழுது, நாலு கோழிமுட்டை வெள்ளைக் கருவிட்டுக் கிளறிச் சோறு, உண்டபின், சாப்பிட்டுப் படுத்துக் கொள்ளவும்.

### 116. இருமலுக்கு

சுக்கு, திப்பிலி, கடுக்காய் இது மூன்றும் சரிபாகம் எடுத்துக்கொண்டு அரைத்துச் சாப்பிடவும். இந்த மருந்தைத் தேனிலிட்டுக் கொட்டைப் பாக்களவு உருண்டை கொள்ளவும். இருமல் தீரும்.

### 117. இலைக்கும், இருமலீளைக்கு ராகாவடிவு

| | |
|---|---|
| ஒசிலம் பட்டைத்தூள் | பலம் 3 |
| அந்திரத் தாமரைத் தூள் | பலம் 3 |
| திப்பிலித்தூள் | பலம் 1 |

இவை மூன்று தூளுங் கலந்து, வைத்துக் கொண்டு வெறுகடிப்பிரமாணம் தேனில் கொள்ள ஈளை இருமல் உப்பிசந் தீரும்.

### 118. ஈளை இருமல் சுவாசகாசம் தீரச் சிங்காதிச் சூரணம் சிரிங்காதிச் சூரணம் பண்ணும்படி

கற்கடக சிங்கி
திரிகடுகு
திரிபலை
செடாமாஞ்சி
இந்துப்பு
கோரைக்கிழங்கு

சேர சமனாகக் கூட்டிச் சூரணம் செய்து, இது கண்ட நிறைக்குச் சரியாகக் கண்டங்கத்திரி வேர்ச் சூரணம் பண்ணிக் கலந்து வெருகடிப் பிரமாணம் வெந்நீரில் காலையில் கொள்ள ஒரு மாதம் கொள்ள ஈளை இருமல் சுவாசந் தீரும்.

### 119. ஈளை இருமல் காச சுவாசம் தீர விளங்காதிச் சூரணம்

வாய்விளங்கம்
ஏலம்

இலவங்கப்பட்டை
திப்பிலி இவை ஓரொன்றும் 1 பங்கும்
சுக்கு
மிளகு
திப்பிலி
இவை ஒவ்வொன்றும் 4 பங்கு சேரக்கூட்டிச், சூரணம் செய்து, சூரணத்துக்குச் சரி சர்க்கரை கலந்து காலையில் களஞ்சு சூரணங் கொள்ளக் காச சுவாசம், க்ஷயம் தீரும். தீபனமுண்டாம்.

### 120. இருமல் தீர இன்னமொருவகை

இண்டம் வேர்ப்பட்டை
கண்டங்கத்திரி வேர்
சுழலாவாரை வேர்
சிறுதேக்கு

சமன் கூட்டிச் சூரணம் செய்து தேனில் கொள்ள இருமல் தீரும்.

### 121. இருமலுக்கு உருண்டை

சுக்கு, சாரணைவேர்
மிளகு, தாளிசபத்திரி
திப்பிலி, புளியஞ்சாம்பல்
கொடிவேலிவேர், சீரகம்
ஏலம், தமாலபத்திரம்
கிராம்பு, கண்டங்கத்திரி வேர்

இவையெல்லாம் நேர் கூறு கூட்டி உலர்த்திப் பொடி செய்து 1 பலம் பொடிக்கு 5 பலம் வெல்லம் தண்ணீர் வார்த்துப் பாகாகக் காய்ச்சி இறுகினபோது, இந்தப் பொடியைத் தூவிக் கிளறி இறக்கிப் பாக்களவு உருண்டைத் தேனில் கொடுக்க இப்படி மண்டலங் கொள்ள இருமல் தீரும்.

### 122 திரிபலாதி கிறுதம் ஈளை இருமல் முதலானதுக்கு

| | |
|---|---|
| திப்பிலி | பலம்5 |
| திப்பிலிமூலம் | பலம் 1 |

| | |
|---|---|
| மிளகு | பலம் 1 |
| செவ்வியம் | பலம் 1 |
| கார்போகரிசி | பலம் 1 |
| சித்திர மூலம் | பலம் 1 |
| சிறுதேக்கு | பலம் ½ |
| சீரகம் | பலம் ½ |
| விளங்கம் | பலம் 1 |
| சடாமாஞ்சில் | பலம் ½ |
| சாதிக்காய் | பலம் ½ |
| கடுக்காய் | பலம் ½ |
| நெல்லிப்பருப்பு | பலம் ½ |
| அதிமதுரம் | பலம் ½ |
| சிறுமூலம் | பலம் ½ |
| தானிக்காய் | பலம் ½ |
| கற்கடகசிங்கி | பலம் ½ |
| கோஷ்ட்டம் | பலம் ½ |

இதுசேர அரைத்து அறுநாழி பசுவினெய்யிலிட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துத் தினமிரு களஞ்சு கொள்ளவும். எட்டு நாள் கொல்லும்போது தீரும். வியாதி ஈளை இருமல், மந்தாரகாசம், காசசுவாசம், வாதகாசம், இளைப்பு, துரைப்பு, உளமாந்தை, அக்கினி மந்தம், உள்சுரம், எரிகுரல், நாக்குச் சிலந்தி, அனல்தாரை, இரண்டு கெந்ததாளி இவை எல்லாம் தீரும்.

### *123. இருமலுக்கு*

கோழிமுட்டைக் குஞ்சு பொறித்ததோடு, கொட்டைப்பாக்களவு எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து இஞ்சிச் சாற்றில் குழைத்து மூன்று நாள் கொள்ளத் தீரும்.

### *124. வேறு (இருமல் ஈளைக்கு)*

| | |
|---|---|
| ஆடாதொடைவேர் | முள்ளிவேர் |
| சங்கம் வேர் | கற்கடகசிங்கி |
| தூதுவிளைவேர் | கண்டங்கத்திரி |
| இன்பூறல் வேர் | |

### 125. ஈளை இருமல் - அருப்பு - அருவிருப்பு சுவாசகாசம் உள்பட்ட வியாதிக்குக் கையாந்தகரை எண்ணெய்

| | |
|---|---|
| கையாந்தகரை | நொச்சி |
| தூதுவளை | பிறாமுட்டி |
| கண்டங்கத்திரி | கீழ்வாய்நெல்லி |
| ஆடாதொடை | சங்கு |
| சிருவழுதளை சமூலம் | சுழலாவாரை |
| தேள்கடை | சாரணை |

இந்தவகை சேரயிலை, இதிலே ஒவ்வொன்று ஒருபிடி இதிலே ஒருபிடி எண்ணெயும் விட்டுத் திரிகடுகு, கொடிவேலி, வேர்ப்பட்டை, வசம்பு, வெட்பாலை அரிசி, அழிஞ்சில் விரை, சிறுதேக்கு, முத்தக்காசு, கண்டங்கத்திரிவேர், தூதுவளைவேர், காட்டாமணக்கம் வேர், அதிவிடையம், சீரகம், கருஞ்சீரகம், பெருங்குரும்பை, பெருமரப்பட்டை, ஓமம், இங்கு, கடுகுரோகிணி கடுகு, வாய்விளங்கம், ஒரொன்று முக்கால் விராகனிடை அரைத்துக் கரைத்து மூன்று நாள் சிறு கொதிவிட்டு, நாலாநாள் வடித்துக் காலையில் களஞ்சி தைலம் கொள்ளவும். அஞ்சுவகை ஈளை இருமல், அஞ்சி அருவருப்பு சுவாசகாசம், நெஞ்சடைப்பு, உழைப்பு, குன்மம், அகுவை பீலிகை, மூலம், பெருவயறு, வயிற்றில் புழு, வயிற்றுப் பொருமல் பக்கசூலை, கிராணி, மந்தாகினி இவையெல்லாம் குணமாம். பாரமருந்து அறிந்து செய்யவும். வெகு உச்சிதம்.

### 126 இருமலுக்கு தேத்தா நெய்

ஆடாதொடை இலைச்சாறு, கையாந்தகரை, இயங்கு, தூதுவளை ஒவ்வொன்றும் சாறுநானாழி, நெய்நாழி விட்டுக் கற்கம், பூசணிப்பூ, ஈத்திண்ணி வெளவால், திப்பிலி, மிளகு, கருஞ்சீரகம், வசம்பு, ஒரொன்று, கழஞ்சு, சுக்கிரண்டு அரைத்துக் கரைத்து வடித்து நக்க இருமல் தீரும்.

### 127. வேறு

தேத்தான் கொட்டை 100 அரைத்து இதில் இளநீர் நானாழி, நெய்யிருநானாழி, விட்டுக் கற்கம், திப்பிலி, மிளகு,

கடுகு, ரோகிணி, கற்கடக சிங்கி, பூவந்திப்பழம், கஸ்தூரி மஞ்சள்,வெளுத்தபிசின், ஓரொன்று ஒரு பலங்கொண்டு அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து நக்க ஈளை இருமல் தீரும். மந்தாரகாசம், உளமாந்தை எல்லா வியாதியும் தீரும்.

### *128. இருமல் இளைப்புக்கு மருந்து*

தூதுவளை சமூலமும், சிறுவழுதளை வேர் கண்டங்கத்திரி வேர், பொன்னாங்காணி வேர் சமூலம், சிறுகீரைவேர், முன்புறோண்டி வேர், கையாந்தகரை சமூலம், குப்பைமேணி சமூலமும், இவையெல்லாந் தண்ணியொக்கக் கொண்டு துவைத்து அஞ்சுபடி தண்ணீர் விட்டு, ஒரு நாள் வெந்து, சுக்கு, திப்பிலி, வசம்பு, கடுக்காய், வெண்காயம், கடுகு, மிளகு, அதிமதுரம், சாதிக்காய் இவை ஓரொன்று கழஞ்சு, அரைத்துக் கரைத்துப் பசுவின் நெய் உரி, பால் நாழி, தேன், உழக்கு, அந்தக் கஷாயத்தில் கரைத்துக் கடுகு திரளக் கிண்டிக் காய்ச்சி வடித்து இரண்டு துட்டிடை இருபதுநாள் கொள்ளவும். கைப்புப் புளிப்புத் தவிரவும் குணமாம்.

### *129. இருமல் காயா சுவாசத்துக்கு எண்ணெய் வகை*

கையாந்தகரை, கீழ்வாய்நெல்லி, பிரமி, தூதுவளை பொடுதலை, சிறுவழுதளை, சுழலாவாரை, இது சமூலமும் வேறுவேறே துவைத்துச்சாறு கொண்டு ஒவ்வொன்றில் சாறு கூடவிட்டு வசம்பு, திப்பிலி, மிளகு, கடுக்காய், பெருங்காயம், சீரகம், சிறுதேக்கு, விழலரிசி, சாதிக்காய், பெருங்குரும்பை, வெட்பாலை, அரிசி, ஏலம், இலவங்கம், கொடிவேலி வேர், கோரோசினை, ஓரொன்று நாழிகைக்குக் கழஞ்சு விழுக்காடு கஷாய நீரிலரைத்துக் கரைத்து நல்லெண்ணை நாழி விட்டு எரித்து மெழுகு பதத்தில் வடித்து அந்தி சந்தி காலத்தாலே இரு கழஞ்சு எண்ணை குடிக்கக் காயா சுவாததம், இருமல், கண்டத்தைப் பற்றின வியாதி எல்லாம் தீரும். 10 நாள்கள் கொள்ளவும்.

### 130. இருமலுக்குக் கையாந்தகரை எண்ணெய்

கையாந்தகரைச் சாறு நாழிகைக்கு கற்கம் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகு, நெல்லி, தான்றி, கற்கடகசிங்கி, சிறுதேக்கு, தேவதாரம், இந்துப்பு, கருங்காலி வேர், மாஞ்சில் இவை, ஒரொன்று கழஞ்சு கொண்டு அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து நக்க இருமல் தீரும்.

### 131. இருமலுக்கு நாசியாலே இரத்தம் விழுகிறதுக்கு மருந்து புகை

நிலத்தில் படர்ந்த இலந்தைக் கொழுந்தும் அரிதாரமும் சமனாகக் கூட்டி அரைத்துக் குழம்பாக்கி வெள்ளீய சீலையில் தடவி நிழலுணர்த்தலாய் உணர்ந்த பிறகு நாலு பத்திரியாகத் திரித்து வைத்து மோருஞ்சோரும் வயிறு நிரம்ப உண்டு கொறுக்கைக் கழியிலே புகை உண்ணவும். 3 நாள் புகை உண்ண இருமல் தீரும்.

### 132. இருமலுக்கு புகை

பொன்னரிதாரம் சுத்தியானது, பொடி பண்ணி இந்த நிறை பொன் மெழுகு கூட்டி, உருக்கி, பாவட்டம், கொம்பு கொண்டு சாரித்து உருண்டை செய்து வைத்துக் கொள்ளவும். புகை உண்ணும் போது புளியஞ்சிராய் தணல் ஒரு கலசத்திலிட்டு ஒரு உருண்டை போட்டு முக்காடு இட்டுப் புகை கொள்ளத் தீரும். கை கண்டது.

பொன்னரிதாரம் பொற்கொன்றைப் பட்டை, கொன்றை இலைச்சாறு விட்டு, அரைத்து வெள்ளீய சீலையில் தடவித் திரி பண்ணி வைத்துக்கொண்டு புகை உண்ணும் போது மோருஞ் சோறுமுண்டு புகை கொள்ளத்தீரும்.

வெள்ளீய சிலையிற் பிரண்டைச் சாறூட்டி நிழலுலர்த்தி மறுநாள் தேற்றாங்காய் நறுக்கித் தண்ணீர் தெளித்து இடித்துப் பிசைந்து சாறு கொண்டு சீலையிலூட்டி உலர்த்தி மறுநாள் குப்பைமேனி சாற்றில் தோய்த்து, உலர்த்தி அதில்

பொன்னரிதாரம் அரைத்து உலர்த்தித் திரியாகச் சுருட்டி வைத்துக்கொண்டு மோருஞ், சோறும் உண்டு எண்ணெயிற் கொழுத்தி அவித்துப் புகை கொள்ளவும். இந்த மூன்றுக்கும் இருமல் தீரும். கண்டங்கத்திரி நெய், எண்ணெய் செய்து கொள்ளவும் தீரும். கை கண்டது.

### 133. இருமலுக்கு மருந்து

முசுமுசுக்கை வேர் வெட்டி வந்து அரிசி மாவிற் கூடப் போட்டு அடைசுட்டுத் தின்னவும் தீரும்.

### 134. இருமலுக்கு நெய்க்கடுகு

| | |
|---|---|
| ஆடாதொடைச் சமூலம் | முழுவிவேர் |
| தூதுவளைச் சமூலம் | காட்டுக்குலசில்லை |
| இன்பூராச் சமூலம் | காட்டுமல்லிகையிலை |
| பெருங்குரும்பை வேர் | குருந்தம்வேர் |
| மனவரை வேர் | கோழியவரையிலை |
| உய்யக் கொண்டான் வேர் | குப்பைமேனியிலை |
| அமுக்குரா வேர் | சங்கிலை |
| மிளகரணை வேர் | முருக்கிலை |
| அழிஞ்சில் வேர் | குக்குலவாலுழுவை |
| வெண்காரம் | கருஞ்சீரகம் |
| இந்துப்பு | நற்சீரகம் |
| திப்பிலி | சீனக்காரம் |
| கிராம்பு | பெருங்காயம் |
| உள்ளி | சுக்கு |
| வசம்பு | மிளகு |
| சவுக்காரம் | எவட்சாரம் |
| நேர்வாளம் | கடுகுரோகணி |
| சாதிலிங்கம் | இரதம் |
| காந்தம் | அரிதாரம் |
| துவட்சிகை | கள்ளிப்பால் |
| நெய் | தேங்காய்ப்பால் |
| எண்ணெய் | |

இவை கூட்டிக் கடுகாகப் பண்ணித் தினம் இரண்டு காசிடைக் கொள்ளவும் இருமல் தீரும்.

### *135. இருமலுக்குப் புகை உண்ணத் தீரும்*

தும்பையிலை, குப்பைமேனியிலை, திருத்துழாயிலை, வேலிப் பருத்தியிலை, செம்முள்ளியிலை, சங்கிலை, ஆடாதொடையிலை, கையாந்தகரை, தூதுவளையிலை, பொடுதிலை, இவை துவைத்துச் சாறு கொண்டு ஒள்ளிய சீலையில் தோய்த்துலர்த்திப் பொன்னரிதாரம் தும்பைச் சாற்றிலரைத்து இச்சாற்றில் குழப்பிச் சீலையில் தோய்த்துலர்த்தி நல்லெண்ணை வார்த்து விளக்கேற்றி இதிற்திரி கொளுத்தி நாழியிற்றலை கீழாகப்பிடித்து போட்டுப் புகை உண்ண இருமல்த்தீரும். அன்றாட நீர்ச்சோற்றுத் தண்ணீர் உப்பிடாமல் குடிக்கவும்.

### *136. வேறு*

சிற்றோடுவிப்பட்டை மெல்லிதாகச் சீவி சங்கற்பொடி சற்றுப் போட்டு உலர்த்தித் தூளாக்கி ஒரு கொட்டாங்கச்சி கொண்டு மூடி அந்தப் பொடிக்குள்ளே, ஒரு தணலையிட்டுப் புகையைக் கொட்டாங்கச்சிக் கண்ணாலே புகையை உண்ண சத்தி நோக்குமிப்படி 4 நாள் புகை உண்ணுமுன்னே மோருஞ் சோறு முண்டு புகை உண்ணவும் இருமல் தீரும்.

### *137. பேராமுட்டி நெய் - இருமல் வாந்திக்கு*

பேராமுட்டி தூக்கு - 2 சமூல மிடிச்சுப் பானையிற்போட்டு எட்டு மரக்கால் தண்ணீர் விட்டுக் குறுணியாகக் காய்ச்சி இறுத்துக் கொண்டு நெய்படி - 1 கூட விட்டுப் பாகு காய்ச்சிப் பதமாய் வருகிற போது கடை மருந்து சுக்கு, மிளகு, திப்பிலி, பெருஞ்சீரகம், செண்பகப்பூ, சடாமாஞ்சில், அரேணுகத் தாளிசபத்திரி, சந்தனம், ஏலம், வகைக்குப் பலம் 1½ இடிச்சுச் சூரணம் பண்ணிப் பாகிலே தூளைத் தூவி லேகியம் பதமான பிறகு மேல்நெய் கால்படி விட்டுப் பிசைந்து பாக்களவு கொடுக்கவுந் தொண்டைக்கம்மலிருமல் வாந்தி மயக்கங்கைகாலெரிவு அரோசிகம் விக்கலிவைகளெல்லாந் தீர்ந்து போகும்.

### *138. ஈளைக்கு*

காசுக்கட்டி, கடுக்காய், அதிவிடையம் இது மூன்றும் பொடி செய்து கொள்ளவும்.

### *139. ஈளைக்கு*

தாயைக்கொன்றானுலர்த்திப் பொடி செய்து சோற்றிலிட ஈளை தீரும்.

### *140. இன்னமொன்று*

பொரசம்பட்டைக் கஷாயம் வைத்துக் கொள்ள நிற்கும்.

### *141. இருமலுக்கு*

சுக்கு, மிளகு, திப்பிலியும் இளவெந்நீரில்க் காடியுடன் உழக்கு வரிக்கத்தாளையும் பிசைந்து கொடுக்க ஈளை இருமல் போகும்.

### *142. ஆனி இருமலுக்கு மருந்து*

தூதுவளை சமூலங் கொண்டு வந்து துவைத்துத் தண்ணீர் வார்த்துப் பிசைந்து உழக்கு சாத்துக்கு ஒரு கொட்டைப்பாக்களவு கண்டங்கத்திரி வேரை அரைத்துக் கரைத்துச் சிறுகாலே மூன்றுநாள் குடிக்க வாயாலே பருத்திச்சுளை போலே விழும். வயத்தாலும் விழும். இதுக்கு மாத்துக் கஞ்சிக் குடிக்கவும். இருமல் தீரும்.

### *143. இருமலுக்கு*

சுக்கு, மிளகு, திப்பிலி இவை இளவெந்நீரிற் காடியுடன் உழக்கு வரிக்கத்தாழையும் பிசைந்து கொடுக்க ஈளை இருமல் தீரும்.

### *144. இருமலிரைப்புக்குத் தூதுவிளாம் நெய்*

தூதுவளம் பழம் 30. கிராம்பு வி. 1, மிளகு, வி. 1, திப்பிலி வி. 1 தேத்தான்கொட்டை தோல்ச் சீவி 4, சீரகம் வி.1, ஆக மருந்து 6. உரிய பசுவின் நெய்யிலே முன் பழத்தைத்

தோல் கனர் உள்ளு விரையும். பொரி வரப் பொரிச்சு அஞ்சு மருந்தும் பொரிப் பொரிச்சு வாங்கிக் கொண்டு எல்லாங் கூட்டித் தேன் குத்தி இறுக அரைத்து அதிலே தேத்தாங்காயளவு நாக்கிலே வைத்திருக்க இருமல் இரண்டும் நிற்கும். கை கண்டது.

### 145. இருமலுக்கு மருந்து

வெண்காரம், பேரிச்சம் பழத்தண்ணீர் பாசித் தண்ணீரில் 2 நாள் கொடுக்கவும். சிலேஷ்டுமம் அறும்.

### 146. வேறு

செவ்வகத்திப்பூ ரசம், திப்பிலிப் பொடியும் கொடுக்கவும். குணமாகும்.

### 147. வேறு

ஏலம், லவங்கம், சுக்கு, திப்பிலி, மிளகு, சூரணம் செய்து சமன் சர்க்கரை கலந்து 10 நாள் கொடுக்க நோய் குணமாகும்.

### 148. பக்கங்கள் எடுத்துப்போடும் இருமலுக்கு மருந்து

நிலவிளா இலைச்சூரணம், மூணுமாடையிடை மிளகு பொடி மாடையிடை கலந்து 3 நாள் கொடுக்கவும்.

**பத்தியம் :**

கீரைக்கறியுஞ் சோறும், சிலேட்டுமம் ரோகம் குணமாகும்.

### 149. தாளீச பத்திரி கிந்தம் இருமல் ஈளை தீபனத்துக்கு

| | | | |
|---|---|---|---|
| தாளீச பத்திரி | பலம் 1 | திப்பிலி | பலம் 4 |
| மிளகு | பலம் 2 | கூகைநீறு | பலம் 1 |
| சித்திரமூலம் | பலம் 1 | திப்பிலிமூலம் | பலம் 2 |
| சுக்கு | பலம் 1 | நாகப்பூ | பலம் 1 |
| கிராம்பு | பலம் 1 | சர்க்கரைசேர் | பலம் 3 |

இடித்து வஸ்த்திரகாயம் செய்து ஒரு சட்டியிற் பசுவின்பால் விட்டு வேடு கட்டின வேட்டின் பேரிலே மருந்து பசுவினெய்யிற் பிசைந்து வைத்து மூடி வெந்த பிறகு இறக்கி ஆறின பிறகு தேன் வார்த்துப் பிசைந்து கழக் கொடிக்காய்ப் பிரமாணம் சாப்பிடவும். அனுபானமறிந்து சாப்பிடவும். தீரும் வியாதி தீபனம், உஷ்ணம், இருமல், ஈளை, அரோசிகம், சீரணம், சுரந்தாகம், மார்வலி, கிராணி, பாண்டு, எலும்புருக்கி,பெரும்பாடு, வாதரோகஞ், சகதிசூன்மம், அதிசாரம் இவை தீரும்.

### *150. இருமலுக்கு எண்ணெய்*

சிறுவழுதளைவேர் உத்தாமணிவேர்
கண்டங்கத்திரிவேர் கருசாலங்கன்றுவேர்
தூதுவளைவேர் செம்முள்ளிவேர்
மிளகரணைவேர் முத்தெருக்கின்செவிவேர்
சங்கம் வேர்

இவை எல்லாஞ் சமபாகங் கூட்டி, பால் வார்த்து வேண்டின மட்டுக்கும் ஆமணக்கெண்ணையிலெரித்து இறக்கிறபோது ஒரு பிடி இலுப்பைத் துளிர் போட்டு இறக்கித் தினம் ஒரு கரண்டி கொள்ள ஈளை இருமல் மருத்தீடு இருமல் இவை எல்லாந் தீரும்.

### *151. ஈளை இருமலுக்கு*

கையாந்தகரை, தூதுவிளை, ஆடாதொடை, சிறுவழுதலை, தேள்கடை சாறடை, குப்பைமேனி, நொச்சில், சிற்றாமட்டி, கீழ்க்காய், நெல்லி, பிரமி இவை ஓரொன்று சாறு நானாழி, எண்ணெய் நாழி, கற்கம், திப்பிலி, கொடிவேலி, வசம்பு, வெட்பாலை அரிசி, இளந்தையடை, சிறுமூலகம், முத்தக்காசு, சுக்கு, ஏலம், அதிவிடையம், அணேரிகம், செவியம், மிளகு, சீரகம், சிறுதேக்கு, பெருங்குறும்பை, மருக்காரை, அசமதாகம், கடுகு, பெருங்காயம், கடுகுரோகணி, விழலரிசி இவை ஓரொன்றுக்கு ஒரு பலங் கொண்டு அரைத்து நக்கவும். இருமல், மூலரோகம், அழுவை, பெருவயறு, கிறுமி, பக்க சூலை, ஆனாகம், கிராணி, அக்கினிமந்தம் இவை தீரும்.

தேவதாளீசச் சாறும், கையாந்தகரைச்சாறும், அவிரி வேரும் தாயைக்கொன்றானுங் கூட்டி, நல்லெண்ணையில் வெந்து நக்க மாறும்.

இளந்தையிலை, மணித்தக்காளியிலைச் சாறும் மெல்லிய சீலையை 5 தடவை ஆற ஆறத் தோய்த்து நிழலுணர்த்தி அதிலே பொன்னரிதாரம் பொடி செய்து சீலைக்குள்ளே தூவிந்திரைத்துப் புளிய பொருக்குத் தணலிலே கொளுத்திப் புகைகொள்ள ஈளை, ஈளை இருமல் தீரும்.

கையாந்தகரைவேர், அவரிவேர், கொடுவேலிவேர், பொன்னரிதாரம், சமனாகப் பசுவின் பால் வார்த்தரைத்து ஈக்கிப் போலே திரைத்து நிழலுணர்த்தி எருக்கங் குழலில் சொருகிப் புகை கொள்ளவும்.

### *152. ஈளை இருமல் இளைப்புக்கு மருந்து*

முடக்கொற்றான் சாறு உரி, வெள்ளை வெங்காயம் பூண்டு 5. அரைத்துக் கலக்கிக் கொடுக்கவும். இப்படி 3 நாள் குடிக்கவும். பால், நெய் வார்த்து உண்ணவும்.

### *153. ஈளை இருமல் - மந்தாக்கினிக்கு*

தாளீசபத்திரி ஒரு பங்கு
மிளகு இரண்டு பங்கு
சுக்கு மூன்று பங்கு

கூகை நீறு 5 பங்கு ஏலம், பலம் ½ இலவங்கப்பட்டை ½ பங்கு இந்தப் படியே சூரணம் செய்து, சூரணத்துக்கு இரட்டி சீனி கலந்து காலமே கொள்ள அருசி, மந்தாக்கினி ஈளை, இருமல் தீரும்.

### *154. ஈளைக்கு மருந்து*

பச்சரிசி மா ஒரு பிடி பொன்னரிதாரம், பணவிடை திப்பிலி மூணுபணவிடை இரண்டும் பொடி செய்து மாவில்க்கூட்டிப் பிசைந்து தேனில் கூட்டித் தின்னவும். ஒரு பாக்களவு தின்னவும். பத்தியம் பிடிக்கவும்.

### 155. வேறு

முற்றின பூசணிக்காய் கொண்டு வந்து பொன்னரிதாரங் கழஞ்சு, திப்பிலி கழஞ்சு, சுக்கு ஒரு கழஞ்சு, சீனி இருபது பலம், பசுவின் நெய் இருநாழி, இவையெல்லாம் வேக வைத்து ஒருநாள் ஒன்றுக்கு எலுமிச்சங் காயளவு திண்ண ஈளை தீரும்.

### 156. ஈளைக்கு நெய்

குறிஞ்சாயிலை, வீழியிலை, பெரும்பருத்தி இலை, உத்தம தாழி இலை, தூதுவளை இலை, ஆடாதொடை இலை, பிரமி இலை, நொச்சி இலை, ஒன்றிச்சாறு நாழி, பசுவின் நெய்நாழி, நல்லெண்ணெய் நாழி, வேப்பெண்ணெய் நாழி, இலுப்பை எண்ணெய் நாழி கூட விட்டுக் குரிஞ்சாழ இன்பூறல், சங்கு, சங்கங்குப்பி, கருக்காய், கண்டங்காலி, செங்கத்தாரி, நத்தைச் சூரி, நீலவேர். இவை எல்லாம் வகை அரத்தை, கச்சோலம், கடுக்காய், மிளகு, அதிமதுரம், இந்துப்பு, கோட்டம், கடுஞ்சீரகம், வெளுத்தப்பிசின், சன்னியனாயன், திப்பிலி, உள்ளி, வசம்பு, ஓரொன்று முக்கழஞ்சு, அரைத்துக் கரைத்துப் பாம்புக் கண்டம் கிடைத்தால் கூட்டிக்கொண்டு வெந்து இளம் பதத்தில் வருகையிலே தூதுவளைச்சாறு நாழியும், புங்கம்பால் உரியும் விட்டு வெந்து மெழுகு பதத்தில் வடித்து நாள் ஒன்றுக்கு முக்கழஞ்சு, எண்ணெய் வெச்செனவோட நக்க ஈளை மாறும், கைப்பு, புளிப்பு, மறக்கவும். கரி - தூதவளங்காய், முருங்கை இலை, பொன்னாங்காணி, காண்டி கூட்டவும்.

### 157. குலைப்புக்கு

செறுப்படிச் சமூலமும், பிடிங்கி உலர்த்திப் பொடி செய்து, வெறுகடிப் பிரமாணம் மோரிலே ஆகுதல், இளவெந்நீரிலாகுதல் குலைப்பு வந்தபோது நாலைந்து முறை கொடுக்கவும்.

### 158. வேறு

துத்தம், துருசி, எலிப்பாஷாணம் இவை தனிலொக்கக் கூட்டி ஊமத்தை இலைச்சாறு வார்த்தரைத்துப் பயறு பிரமாணம் உருண்டை பண்ணிப் பசுவின் பாலிலே ஒரு உருண்டை இடவும்.

### 159. வேறு

மூக்குறட்டை வேர், எண்ணெயிற் கொதிப்பித்து இடவும். மேலும். பூசவும் தீரும். பலதுந்தீரும். ஈளை, இருமல், மந்தாரகாசம், கற்கரை இவை எல்லாத்துக்குந் தேனில் கொடுக்கவும்.

### 160. ஆடாதொடை நெய் - ஈளை இருமலுக்கு

ஆடாதொடைச் சமூலமும், சோளிப்படி 120 பலங்குருக்கத் தரித்து இடித்து இரு தூணி நீர்விட்டு 5 நாள் ஊறிப் பதக்கு நீருக்குக் காய்ச்சி வடித்துப் பிழிந்து நானாழி நெய்யுங் குறுணிப் பாலும் விட்டுக் காய்ந்த பிறகு கற்கம், கண்டங்காலி வேர், வட்டுவேர், ஆடாதொடை வேர், சுழலாவாரை வேர், வட்டத்திருப்பி வேர், முக்காவேளை வேர், அமுக்கிராவேர், சிறுமூலகம், சிறுதேக்கு, திரிகடுகு, அரத்தை, தேவதாரம், கார்கோழி, நீர்கார்கோழி, சிவதம், கிடவங்கம், சந்தணம், இடமியம், பேரீச்சம்பழம், முந்திரிகைப் பழம், இருவேலிவேர், ஏலம், இலவங்கம், விழாலரிசி, கற்கடகசிங்கி, மரமஞ்சள், இந்துப்பு ஓரொன்று நாழி நெய்க்கு, கழஞ்சு, விழுக்காடு கொண்டு, அரைத்துக் கரைத்துப் பதத்தில் வடித்து நக்கவும். ஈளை, இருமல், உணர்தல், ஈராப்பித்தம், விஷசுரம் நெஞ்சில் நெரிவு இவை எல்லாந் தீரும்.

### 161. திப்பிலிநெய் - இருமலுக்கு

திப்பிலி இரண்டு பலம் அரைத்து நாழி நெய்யில் கலந்து மிளகு, கடுகு ரோகணி ஆழாக்கு வெளுத்தபிசின் ஒரு பலங் கூட்டி வடித்து நக்க எல்லா வியாதியும் இருமலுங் கிரந்தியுந் தீரும்.

### 162. இருமலுக்கு நாக சிந்தூரம்

துத்தநாகம், முத்திரைக்கட்டி பலம் 5, இலுப்பெண்ணெயும், காண்டியிற்றடவி உருக்கி இருபதுதரம் வெள்ளாட்டுப் பாலிற் சாய்க்கவும். பிறகு புதுச்சட்டியிலிட்டு

வெடியுப்பு, ஓமம் உழக்கும், சுக்கு பலம் 5, பொடிசெய்து நிரவி சிறுகச் சிறுகப் போட்டு வறுக்கவும். பிறகு சிவந்த நாயுருவி கண்டங்கண்டமாக நறுக்கிப் போட்டு வறுக்கவும். முருகம்பூப்போலே சிவந்திருக்கும். சிந்தூரத்தை எடுத்துக் கொண்டு சிந்தூரம் ஒரு பணவிடையுஞ் சுக்கு, மிளகு, வெதுப்பிப் பொடி செய்து வெருகடிப்பிரமாணம் தேனில் இரண்டு நேரமும் 40 நாள் கொள்ளவும். இதுக்குத்தீரும் வியாதி ஈளை இருமல், எலிக்கடி, மந்தாரகாசம், காசசுவாசம், அரிகுரல், நெஞ்சு நோக்காடு இவைகள் எல்லாந் தீரும்.

### *163. மருத்தீட்டுக்கும் பாசறவற்றின இருமலுக்கும்*

வேலிப் பருத்திக் கொழுந்து 5 பாக்களவு அரைத்து வெண்ணெயில் விழுங்கவும். மருத்தீடு மாறும்.

வேலிப்பருத்தி இலையை வறுத்துப் பொடி செய்து இரண்டு, காசிடை சுக்கு, இரண்டு காசிடை திப்பிலி, இரண்டு காசிடை மிளகு ஆக இந்த நாலு மருந்துங் கூட்டி தேனில் கொள்ளவும்.

பாசவற்றின இருமல் தீரும்.

### *164. இருமலுக்கு*

கையாந்தரை ஒரு பிடி
ஆடாதொடை ஒரு பிடி
நீர்முள்ளி சமூலமொரு பிடி
செம்புள்ளிவேர் ½பிடி
முருக்கிலை ½பிடி
சுக்கு

கடுக்காய் நானாழி நீர் வார்த்து நாழியாகக் காய்ச்சி வேறே அடுப்பில் வைத்து நாளொன்றுக்கு இரண்டு, மூன்று காசிடை வார்த்துத் திப்பிலி மேல் பொடி தூவிக் கொடுக்க இருமல் தீரும்.

### *165. இன்னமொன்று*

தூதுவளைவேர் அரைத்துப் பசுவின் பாலில் புகட்ட மூன்று நாளில் இருமல் மாறும். கடுக்காய்ப் பொடி செய்து

தேனில் குழைத்துத் திப்பிலி மேல் பொடி கூட்டிப் பிள்ளை நாவில் தடவ இருமல் மாறும், குப்பைமேனிவேர் ஒரு காசத்தினை முலைப்பாலில் கொடுக்க வயிறு அடைபடும்.

### 166. அரிதார சிந்தூரம்

நாலாமுறைக்காய்ச்சல் தீரும். மருதம்பட்டைச் சாற்றி பாடியிலே கொடுக்கச் சலக் கழிச்சல் போகும். பருத்தி விதையில் கொடுக்க வெகுமூத்திரம் போகும்.

### 167. இருமலுக்கு, சளிக்கு நசியம்

| | |
|---|---|
| கொழிஞ்சில் வேர் | உள்ளி |
| நொச்சில் வேர் | வசம்பு |
| பிரட்டான் வேர் | சுக்கு |
| வெள்ளெருக்கு வேர் | மிளகு |
| அழிஞ்சில் வேர் | |

இவை வேர்களரைத்துத் தன்னில் ஒக்கக் கூட்டி எண்ணெய் பண்ணித் திப்பிலி மேல் பொடி தூவி இறக்கி எண்ணெய் உள்ளேயும், மேலுக்கும் பூச நிற்கும்.

### 168. ஈளை இருமலுக்கு நாக சிந்தூரம்

இரதம்
காரீயம்
துத்தநாகம்

இவை மூன்றுங் கூட்டி உருக்கிச்சட்டியிலிட்டு மஞ்சட் பொடி தூவித்தூவி வறுத்து இடிக்கக் கரண்டியில் தேய்த்து வறுக்கச் சிந்தூரம் பற்பம் போலே ஆகுமிது. ஆறுபணவிடை தேனிற்கொடுக்க ஈளை இருமல் காச சுவாசம் தீரும். வியாதி அறிந்து சத்துவமறிந்து ஒரு மண்டலம் அரை மண்டலம் சாப்பிடத் தீரும்.

### 169. இருமலிரைப்புக்குத் தாளீசபத்திரிச் சூரணம்

தாளீசபத்திரி ஒன்று
சுக்கு மூன்று

மிளகு இரண்டு
திப்பிலி நான்கு
எவட்சாரம் ஐந்து
ஏலம் ஐந்து
இலவங்கம் ஐந்து
குடசப்பாலை இரண்டு
வெண்காரம் ஒன்று
சர்க்கரை முப்பத்திரண்டு

இவை கூட்டிப் பொடி செய்து சர்க்கரையில் கலந்து காலமே வெருகடிப் பிரமாணம் தேனிலாகுதல் இஞ்சியிலாகுதல் அரை மண்டலம் சாப்பிட இருமல் இரைப்புத் தீரும்.

### 170. சேற்றுமத்துக்கு நசியம்

கடப்பங் கொட்டையை எலுமிச்சம் பழச்சாற்றிலாவது முலைப்பாலிலாவது நசியம் பண்ணச் சேற்றுமம் தீரும். கைகண்டது.

### 171. சேற்றும விகாரங்களுக்கு நெய்

ஆடாதொடை இலை
நொச்சி இலை
குப்பைமேனி இலை
சங்கிலை
தூதுவளை இலை
பிரமி இலை
பொடுதலை இலை
வேலிப்பருத்தி இலை
செம்பை இலை
சாறணை இலை
தேள்கொடுக்கிலை
செம்முள்ளி இலை
கையாந்தகரை இலை
பொறாம்பிலிலை
பிறாவடி இலை
இன்பூறல் இலை
பிரண்டை இலை

இவை ஓரொன்று சாறு, பசுவின் நெய் வெள்ளாட்டுப்பால் 4, இதில் வட்டத்திருப்பி வேர், பெருமருந்து வேர், கொடுவேலி வேர், அமுக்கிராவேர், திப்பிலி, அத்தித்திப்பிலி இந்துப்பு, விழாலரிசி, பெருங்காயம், செருதேக்கு, செருமூலகம், தேவதாரங்

கற்கடகசிங்கி, அரிதாரம், மனோசிலை, கருஞ்சீரகம், கிராம்பு, வாலுளுவை அரிசி, சதகுப்பை, தான்றிக்காய், சாதிக்காய், சுக்கு, மிளகு, கடுக்காய், நெல்லிமுள்ளி, இவை ஓரொன்று நாழிக்குக் கழஞ்சரைத்து கரைத்துப் பதத்தில் வடித்து நாள் ஒன்றுக்கு நாலு காசிடை கொள்ளவும்.

### *172. சேற்றுமத்துக்கு*

கண்டங்கத்திரி
தூதுவளை
சங்கு
துளசி
ஆடாதொடை

இந்த அஞ்சிலையும் புட்டவியலாக அவித்துப் பிழிந்த சாற்றிலே சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய் எல்லாம் வறுத்துச் சாறு விட்டரைத்துப் பாக்களவு உருட்டி நெற்பொரி மாவிலே புரட்டி உணர்த்தி வாயிலடக்கச் சேற்றுமம் தீரும்.

### *173. சிலேட்டும ரோகத்துக்கு நெய் பண்ணும்படி*

| | |
|---|---|
| கடுகு | சித்தமட்டி |
| வெள்ளை வெங்காயம் | பேர்மட்டி |
| கருஞ்சீரகம் | சிறுகாஞ்சொரி |
| வெளுத்தபிசின் | வண்டவாசி |
| மிளகு | தூதுவளை |

அதின் சாறுகொண்டு நறுநெய் நாழி புகட்டிப் பதத்தில் வடித்து ஒரு கரண்டி நெய் நக்கவும். கடை மருந்து முக்கழஞ்சு கொள்ளவும்.

### *174. சிலேட்டுமம் 20-க்கும் பெயர்*

| | |
|---|---|
| பூறுவகாசம் | கிலேசம் |
| நைஷ்டயகாசம் | சிம்மகம் |
| ரிகுதகாசம் | கண்டசிம்மகம் |

| | |
|---|---|
| சீபிகாசம் | அந்திசிம்மகம் |
| பயித்தியகாசம் | சுவாசம் |
| சீதகாசம் | உப்புசம் |
| அஷ்டக்காசம் | சிலேட்டுமம் |
| சிலேட்டுமகாசம் | மாகாளி சிலேட்டுமம் |
| திவாசிலேஷ்டுமம் | பூதகாசம் |
| கொண்டகாலிக்கை | |

### *175. சிலேட்டுமத்துக்கு மருந்து*

தோத்தாங்கொட்டை சுட்டு, அரைத்துச் சீரகம், ஏலம், திப்பிலி இவை வறுத்துப் பொடிசெய்து தேனில் குழைத்து, விழுங்கத் தீரும்.

### *176. கபரோகத்துக்கு சூத்திராயயாதி லேகியம்*

| | |
|---|---|
| கண்டங்கத்திரி வேர் | பலம் 100 |
| கடுக்காய் | பலம் 100 |

நாலு மரக்கால் சலத்திலே போட்டு ஒரு மரக்கால் சலமாய்க் காய்ச்சி ......... பலம் 100. கூடப் போட்டு, இலேகிய பக்குவமாய்க் காய்ச்சிக் கொண்டு இதில் தேன்பலம் 6 .... பலம் 3, திப்பிலி பலம் 3, மிளகு பலம் 3, இலவங்கப்பட்டை பலம் 1, இலவங்கப்பத்திரி பலம் 1 .........., ஆனைத்திப்பிலிபலம் 1 இவையெல்லாம் பொடி செய்து அந்த லேகியத்தில் போட்டு ......., பிடகபரோகம் தீரும். இளைப்பு, இருமல், பஞ்சகுன்மம், விக்கல், பீனிசம், இவை தீரும். பசி உண்டாம்.

### *177. சேத்துகத்துக்குக் கற்பூராதிச் சூரணம்*

| | |
|---|---|
| வெள்ளிலோதித்திரம் | இலவங்கத்தோல் |
| தற்கோலம் | நாகப்பூமுளஞ்செவியம் |
| சாதிக்காய் | கற்பூரம் |
| சர்க்கரை | |

இவை சமன்பொடி செய்து தேனிலாகுதல் நெய்யிலாகுதல் குழைத்து விழுங்க ஈரல், குலையெரிவு,

காசசுவாசம், குன்மம், பீலிகை, கண்டத்திலுள்ள சேத்துமம், வறட்சி, அக்கினி மந்தம் பித்தவிகாரந் தீரும்.

### 178. சேத்துமத்துக்கு

கடுக்காய் பலம்
தான்றிக்காய் பலம்
நெல்லுப்பொரி

இவைபொடி செய்து தேனில் குழப்பிக் கொடுக்கவும்.

### 179. வேறு

கண்டங்கத்திரி சமூலம், பொடி செய்து பசுவின் பாலில் குடிக்கவும்.

| | |
|---|---|
| வல்லிஇலை | கடுகு |
| திப்பிலி | வெருகங்கிழங்கு |
| ஓமம் | ஏலம்பழம் |
| அமுக்குராஇலைச்சாறு | சுக்கு |
| வாழைக்கிழங்கு | மிளகு |

இளவெந்நீரில் அரைத்துக் கொடுக்க மாறும்.

### 180. கபத்துக்கும் சுவாசத்துக்குஞ் சூரணம்

| | |
|---|---|
| தாளீசபத்திரி | கூகை நீறு |
| திப்பிலிமூலம் | பேரீச்சம்பழம் |
| சிறுநாகப்பூ | முந்திரிகைப்பழம் |
| நறுக்குமூலம் | இலவங்கப்பத்திரி |
| கற்கடகசிங்கி | செவ்வியம் |
| இலவங்கப்பட்டை | மாதளையோடு |
| கடுக்காய் | கிராம்பு |
| சாதிப்பத்திரி | சீரகம் |
| ஏலம் | திப்பிலி |
| மிளகு | சுக்கு |
| வில்வவேர் | நெருஞ்சிவேர் |
| கொத்தமல்லி | |

இவையெல்லாம் வகைக்கு ½ பலம் வீதம் கொண்டு வந்து நன்றாய்ச் சூரணித்து வடி செய்து கொண்டு எலுமிச்சம்பழம் சாறுவிட்டுப் பிசறி நிழலுணர்த்தலா யுணர்த்திக் காய்ந்த பிறகு இஞ்சிச்சாறுவிட்டுப் பிசறி அதுவும் நிழலுணர்த்தலாய் உணர்த்திக் காய்ந்த பிறகு இந்தச் சூரணம் நின்ற நிறைக்குச் சீனிச் சர்க்கரை கலந்து சாப்பிடவும். கபத்தையும் சுவாசத்தையும் அடிக்கும். கைகண்டது

# நிறைகளின் அட்டவணை

| | |
|---|---|
| 3 குன்றிகள் | - பணவெடை, 488 மி. கி. |
| 32 குன்றி நிறை | - வராகனெடை 3. 5 கிராம் |
| 1 வராகன் அல்லது 40 குன்றி | - 1 கழஞ்சு 4.4 கிராம் |
| 10 வராகனெடை | - 1 பலம் 35 கிராம் |
| 9 குன்றி நிறை | - 1 கிராம் |
| 1 தோலா | - 1 ரூபா எடை (12 கிராம்) |
| 1 ஆழாக்கு | - 8 அவுன்ஸ் 240 மி.லிட்டர். |
| 1படி | - 64 அவுன்ஸ் 1920 மி. லிட்டர் |
| 1 நாழி | - 1 ஆழாக்கு |
| 1 துட்டெடை | - 1 கிராம் எடையுள்ள திரவம் (கன செ.மீட்டர்) |
| 1 பணவெடை | -1 காசெடை (4 சொட்டுக்கள்) |
| 1 உளுந்து | - 65 மில்லிகிராம் |
| 1 குன்றி | - 130 மில்லிகிராம் |
| 1 மஞ்சாடி | - 260 மில்லிகிராம் |
| 1 மாஷம் | - 780 மில்லிகிராம் |
| 1 பண எடை | - 488 மில்லிகிராம் |
| 1 கழஞ்சு | - 4.4 கிராம் |
| 1 ரூபாய் எடை | - 12 கிராம் |
| 1 பலம் | - 35 கிராம் |
| 1 வராகனெடை | - 3.5 கிராம் |
| 1 கஃசு அல்கைசா | - 8.750 கிராம் |
| 1 தோலா | - 12 கிராம் |
| 1 அவுன்சு | - 30 கிராம் |